தென்மொழி

தமிழ்ப் பயிரில் இந்தித் தீ!

*

செழிக்கின்ற தமிழ்ப்பயிரில் இந்தியெனும்
செந்தீயை மூட்டி விட்டே,
அழிக்கின்றார் தமிழினத்தை! ஆரென்று
கேட்பதற்கோ ராளிங் இல்லை!
மொழிக்கின்று வந்தநிலை தவிர்க்கிலமேல்
தமிழ்நாட்டை அடிமை சூழும்!
[illegible]ழிக்கின்ற சூளுடனே கொல்களிறு
போல்எழுந்து முனைவீர் இன்றே!

தனித்தமிழ்
இலக்கியத் திங்களிதழ்

50 காசு

வைகாசி
தி.பி. 1994

தென்மொழி
இலக்கிய இதழ்

திருப்பாதிரிப்புலியூர்.
சுவடி 1. ஓலை 4.

தி. பி. 1994
வைகாசித்திங்கள்.
(1963–மே)

சிறப்பாசிரியர்
புலவ, பண்டித,
ஞா. தேவநேயப் பாவாணர்

பொறுப்பாசிரியர்
பெருஞ்சித்திரன்

உறுப்பாசிரியர்
ம. இலெ. தங்கப்பா
மு. சாத்தையா
செம்பியன்

உரிமை, வெளியீடு
தாமரை
உலக முதல்வி

அச்சகம்
மித்திரா அச்சகம்
திருப்பாதிரிப்புலியூர்.

தனியிதழ் 50 காசு.

தென்மொழி
இலக்கிய இதழ்

'கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை' எனவே தமிழர் தோளெழுந்தால்,
எஞ்சுவதில்லை புவியில் எவரும் எதிர்நின்றே!

தமிழகக் கட்சிகளுக்கு...!

நாகரிகமென்பது ஒருவனின் தனிப்போக்கு மக்களின் பொது ஒழுகலாற்றுக்கு இயைபாக விருத்தலும், அவ்வழியமைந்த எல்லா மக்களின் இயக்கமும் மாந்தரை மேன்மேலும் உயர்த்திக் கொண்டு போகும் ஒரு நல்வழி நாடிப் போதலுமே என்று பொருள்படுமாயின், அந் நாகரிகமென்னும் மீமிசை மாந்த வொழுகலாற்றுக்கு இத் தமிழகமே எல்லாத் துறைகளிலும் வழிகாட்டியாக அமைந்த நிலையை மக்கட் பண்பாட்டினை ஆராய்ந்து நுண்ணிதின் அறிந்த பெருமக்கள் ஒப்புவர். ஆனால் இது பழங் கதையாய்—வெறும் இலக்கியக் கற்பனையாகவே இருக்கின்றதே யன்றி, இற்றைத் தமிழர்தம் குட்டை மனங்கட்கு எட்டுவதாக இல்லை.

இன்றைய தமிழகத்துள் எத்தனை சமய, இன, குலப் பிரிவுகள் உள்ளனவோ, அத்தனை அரசியல், பொதுவியல் கட்சிகள் உள்ளன என்பதை ஒவ்வொருவரும் நாணத்தோடு ஒப்பியே தீரல் வேண்டும். குலப்பிரிவுகளின் அடிப்படையில் அமைந்த கட்சிகளைவிட அரசியல் கட்சிகள் குறைவு;

அரசியல் கட்சிகளைவிட மக்கள் முன்னேற்றங் கருதித் தொண்டாற்றுங் கட்சிகள் மிகக் குறைவு!

இவ்விழி நிலைகட்கெல்லாம் ஒரு முடிவுக் காலம் ஏற்பட்டுத் தமிழர்களின் ஒற்றுமைக்கு ஒரு விடிவுக் காலம் தோன்றியது போல், இன்று வடநாட்டு அரசியலாரால் வலிந்து புகுத்தப் பெறும் இந்தியெனும் முழுமையற்ற ஒரு மூளி மொழியை எல்லாக் கட்சியினரும் எதிர்த்துத் தடுக்க வேண்டிய நிலை வந்துள்ளது. இந்தி யெதிர்ப்புச் செயல் நாம் எதிர்பாராத வொன்றென ஒரு பால் நாம் வருந்தினும், அதன் பொருட்டுத் தூங்கிக் கிடந்த தமிழ் நெஞ்சங்கள் தட்டி எழுப்பப் பெறுவதும், பல்வகைக்கட்சிகளாலும் பிளவுற்றுக் கிடந்த பாழ்ந் தமிழர் உள்ளங்களில் ஒற்றுமைத் தீ சுடர்விட்டு எரிவதும், மறுபால் நம்மை மகிழ்விக்கும் செயல்களாம்.

சீன எல்லைப் போர் இந்திய மக்களின் ஒற்றுமைக்கு எங்ஙனம் வழி வகுத்ததாகப் பேசப்பட்டதோ, அங்ஙனமே இந்தி வெறியர்களால் தென்னகத்தார்மேல் வலிந்து புகுத்தப்பெறும் இந்தித் திணிப்பும் சிதறுண்டு கிடக்கும் தமிழர் தம்மை ஒருங்கு கூட்ட வல்ல செயலாகவே நாம் அறிந்து மகிழ்கின்றோம்.

ஆங்கிலேயன் ஆட்சிப் பிடிக்குள் இருந்து விடுபட்ட இவ்விந்திய மக்களை, சொல்லாற்றலும் செல்வ வலிமையுங் கொண்டார் தம்தம் கட்சிப் பிடிக்குள் வளைத்துக் கொண்டனர். தமிழகத்தும் இவ்விழி நிலை புகுந்தது.

பொதுத் தொண்டு செய்ய விரும்பிய ஒவ்வொருவரும் ஒவ்வொரு கட்சியைத் தொடங்கி மக்களை வளைத்துப் பிடித்தனர். மக்களுக்காகத் தொடங்கப் பெற்ற அக் கட்சிகள், தம்மை நடத்திச் செல்லும் தலைவர்கட்காகவே என்று திசை மாறின. அடிமையுணர்வில் ஊறிப் போயிருந்த தமிழர் தம் போக்கிடம் தெரியாமலிருந்த காலை, புற்றீசல் போல் கிளம்பிய வெற்றுரை யாரவாரத்தாரின் சொற்றிறங்களில் மயங்கிப் பல கட்சியினராகப் பிளவுண்டு கிடந்தனர்.

ஒவ்வொருகுலத்துக்கும் ஒவ்வொருகட்சிஎன்ற இவ்விழிநிலை இத் தமிழகத்தன்றி இவ்வுலகத்து வேறெங்கணும் காண்பதரிது.

குல, சமய, கட்சி வேறுபாடுகளால் இவர் பிளவுண்டு சிதறின ரேனும், இவர் எல்லாரையும் தளர்வுறுது பின்னிப் பிணைத்துக் கொண்டிருந்தது தாய்மொழி யுணர்வேயாகும். அந்த அடிப் படை உணர்வுக்கே தீங்குவந்த இந்நிலையில், அவர்தம் உள்ளம் அப்போலிப் புற வேறுபாடுகளை மறந்து ஒன்றுபட்டு இயங்கல் இயல்பாயிற்று. இந்நிலை பெரிதும் வரவேற்கப் பெறுவ தாகும்.

தமிழர்தம் முன்னைய வரலாறு முற்றும் மறந்து போவதன் முன்னம், தங்களை நிலைப்படுத்திக் கொள்வதற்கு இதைத்தவிர வேறொரு நல்ல நேரம் வாய்ப்பதரிது என்று கருதுகின்றோம். இந்நிலையில் எல்லாக் கட்சிகளின் தலைவர்களையும் நோக்கி நாம் இறைஞ்சிக் கூறுவது இதுதான்:

''நீங்கள் அமைத்து வளர்த்துக் கட்டிக் காத்து வரும் உங்கள் கட்சிகள், பெயராலும் அமைப்பாலும் நோக்காலும் போக்காலும் என்னென்ன வேறுபாடுகள் கொண்டவையாக விருப்பினும், உங்களின் இறுதியான குறிக்கோள் தமிழர்தம் மறு மலர்ச்சி யொன்றே யென்பதை நீங்கள் எல்லாரும் ஒப்புக் கொள்வீர்கள். தமிழர்கட்கு உண்ணுதற்குச் சோறும், கட்டு தற்குக் கந்தையும், குந்துவதற்குக் குடிலும் இன்னும் பிற வகை வாய்ப்பு நிலைகளும் எத்தனை தாம் கிடைப்பினும், அவர்தம் பண் பாட்டையும், உலகுக்கே உள்ளொளி கொளுத்திய அவர் தம் மக்கள் அமைப்புகளையும் விட்டு விட்டுப் போக உங்களில் எவ ரும் ஒப்பமாட்டீர்கள் என்பதை நன்கு உணர்வோம். உங்கள் மானத்திற்கே அறைகூவல் விட்டது போன்று உங்கள் தாய் மொழி யுணர்வுக்கே கேடு பயப்பதான இவ்விந்தித் திணிப்பு என்னும் பெருந்தீ, உங்கள் எல்லாரையும் சுட்டுப் பொசுக்குவது மறுக்க முடியாத உண்மை. உங்கள் உயிர்க்கும், வாழ்வுச் சிறப்புக்கும் உலை வைத்துக் கொண்டு இவ்வுலகில் எவ் வகை வாழ்க்கையையும் மேம்பட்டது என்று கூற, உங்களில் எவரும் கோழையரல்லர்.

நடுவணரசினர் புகுத்தும் இந்தி உங்கள் தாய் தமிழைக் காட்டினும் எவ்வகையினும் சிறந்ததன்று. மொழியியலும், சொல்லியலும் மக்களின் வாழ்வியல் வளர்ச்சிக்கெனவே அமைந் துள்ள இயற்கை மொழியாந் தமிழ்போல் மெய்யறிவு சான்ற

ஒரு மொழியை இவ்வுலகெங்கணும் நீங்கள் தேடிப் பெறல் முடியாது. இத்தகைய உயர்ந்த பெருமை ஒன்றே உங்கட்குச் சாலுவதாகும்.

செல்வ நிலையாலும், கொள்கை முரணாலும் வேறுபட்டுக் கிடக்கின்ற உங்கள் எல்லார் உள்ளங்களிலும் செந்தமிழ்த்தாயே நடமிடுகின்றாள். ஆகலின் மக்கள் தலைவர்களே! நல்லாட்சி நிறுவ விரும்பும் தமிழர்தம் முன்னோடிகளே! ஏழை எளிய உள்ளங்களின் முன்னேற்றத்திற்கெனப் பாடுபடும் அறிஞர்களே! பச்சைத் தமிழர்களே! உங்கள் கைகட்கிட்ட தளைகளை அறுத்தெறியுங்கள்! வாய்கட்கிட்ட பூட்டுகளை உடைத்துத் தூள் தூளாக்குங்கள்! கட்சியெனும் கட்டுப் பாட்டுக்குள் அடக்கும் கொள்கை வேலிகளைப் பிய்த்துக் கடலிற் போடுங்கள்! உங்கள் மானம் ஒன்றே தலை தூக்கட்டும்! உங்கள் செந்தமிழ் அன்னைத் திருநடம் புரிய வீற்றிருக்கும் உங்களின் அருளுள்ளங்களை பரக்கத் திறந்து வையுங்கள்! போக்கற்றுக் கிடக்கும் இத்தமிழ்க் குடும்பத்தின் பெருமை காக்கப் போர்க் கொடி உயர்த்துங்கள். மொழி வெறியர்களால் வலிந்து புகுத்தப் பெறும் இந்தியெனும் வல் விலங்கை வேட்டமாடி ஒற்றுமைக் கட்டாறியால் அதன் கொடுமை உயிரை வௌவுங்கள்!

உங்கள் தொல் வரலாற்றை மீண்டும் உயிர்பெறச் செய்யும் உங்கள் பெயர்கட்குப் புற நானூறுகள் பாடப்பெறும்! பரணிகள் முழக்கப் பெறும்! பதிற்றுப் பத்துகள் சூட்டப் பெறும்!

அறியார் விளைத்த இப் பெருங்கேடு அவர்கட்கே ஒரு முடிவு கட்டும்படி முனைந்து நில்லுங்கள்! பெருமக்களே! தமிழ் விளைந்த நிலம் இது! இங்கு மறம் விளைந்தது; மானம் பிறந்தது; குறள் பூத்தது; பண்பாடு கமழ்ந்தது; இதைக் காட்டுமிராண்டி களின் கள்ளுண் களமாகச் செய்ய நீங்கள் இசைய வேண்டாம். உள்ளார்ந்த தமிழர் தம் சொல்லார்ந்த புகழ் நிற்க, வல்லார்ந்த நெஞ்சமுடைய எல்லார்க்கும் நாம் விடுக்கும் வேண்டுகோள் இதுவே! நிறைவேற்றுங்கள்! தமிழ் வீழ்ச்சியுறல் எஞ்ஞான்றும் இல்லை! தமிழர் வீழ்ச்சி உலகின் இறுதி; இது உறுதி.

—○—

மக்களவை

தமிழர் உரிமை ஏடு!

.. தென்மொழியின் தேன் மணக்கும் தமிழைத் துய்க்குந் தொறும் மனம் நுவலா மகிழ்வுறுகின்றது. பல்வகைக் கருத்துக் கருவூலங்களைப் பாங்குறக் கொண்டு பாவாணரின் சீரிய மொழியாராய்ச்சியை முழக்கி, துரை-மாணிக்கனாரின் எழுச்சிப் பத்தைப் போன்ற உணர்வுப் பாடல்களைச் சுமந்து, இனிய, எளிய, தனித் தமிழ்க் கட்டுரைகள் பலவற்றைத் தாங்கித் தமிழ் நாடு முழுவதும் பெருமித நடையுடன் உலா வருகின்றது.

பிழைப்புக்காக நடமிடும் போலி ஏடுகளைப் போலன்றி உள வுரத்துடன் தமிழுக் குழைக்க முன் வந்துள்ள ஒப்பற்ற திங்கள் இதழ் தென்மொழி. இஃது கிழமையிதழாகக்கிளர்ந்தெழத் தமிழர் தம் பேருதவி பெரிதும் வேண்டற்பாலது.

இதனில் இல்லாத எப் பொருளுமில்; காய்தல் உவத்த லின்றி உள்ளதை உள்ளவாறே உரைக்கும் "நூல் நிறை" யின் பெற்றி பெரிது.

"அறிவியலைக் கூறும் திறன் தமிழுக்கில்லை; அறிவியற் கருத்துகள் தமிழிலில்லை; பயிற்று மொழி யாகுந் தகுதி தமிழ் பெற்றிலது" எனக் கழறும் தமிழ்ப் பகைவர்தம் கூற்றுகளைப் பொய்யாக்கத் தோன்றியுள்ளது பொன்மொழியேடாம் தென் மொழி!

'தென்மொழிக் கழகம்' உருவாகித் தமிழர் யாவரும் அதில் உறுப்பினராதல் வேண்டும். தென்மொழி எல்லாத் தமிழில்லங் களிலும் தவழ வேண்டும்.

தென்மொழி வீறு நடைபோடத் தமிழர் யாவரும் ஆண்டுக் கையொப்பம் செலுத்தி ஆக்கமும் ஊக்கமும் அளிக்கவேண்டும்.

வெல்க தமிழரின் ஒப்பற்ற உரிமை ஏடு!

—புலவர் வி. பொ. பழனிவேலன், ஏனங்குடி.

ஃ ஃ ஃ

தென்மொழி நிறை!

...தனித் தமிழ் ஒன்றுலேயே உலகை வெல்ல முடியும் என்பதைத் தென்மொழி வீறுடன் முழக்குகிறது. தென்மொழியின் ''நூல் நிறை'' தமிழன் நாளும் முன்னேறுகிருன் என்பதை உணர்த்துகிறது.

— **சேத்தூர் கூத்தன்,**
ஆசிரியர் ''பரணி'' சென்னை-28.

நாளும், காலமும் பாராமல்...!

நன்றி யில்லார் செறிந்து, அணுவளவும் தமிழ்ப் பற்றில்லார் ஆரவாரம் செய்யத், தமிழ் மக்களைத் தாழ்மைக்கும் கீழ்மைக்கும் பயிற்சி பெறத் தூண்டும் கயமை நாளிதழ்களும் கிழமைப் பாழிதழ்களும் பல்கிப் பெருகியுள்ள இப் பாழான நாளிலே, கல்வி வாணிகர் கணக்கற்றுப் பெருகியுள்ள இப்பாழான காலத்திலே, தூய தமிழ்த் தென்மொழி மீண்டும் மலர்ந்தது கண்டு சால மகிழ்ச்சியடைந்தேன். அறிவுசான்ற அருந்தமிழ்ப் புலமைக்கு 'உலகத் தமிழ் மக்கள் தற்காப்புப் பேரவை'யின் சார்பில் நன்றி செலுத்துகின்றேன்.

—தூயதமிழ்க் காவலர் **அண்ணல்தங்கோ,**
வேலூர் (வ ஆ.)

ஃ ஃ ஃ

தமிழரின் மாமருந்து!

...தன் மொழிக்கும் பிற மொழிக்கும் வேற்றுமை தெரியாது, தன் மொழியென எண்ணிப் பிற மொழியைப் போற்றித், தமிழ் மொழியை அழித்து வரும் இழிநிலையில் கிடந்துழலும் தமிழ் மக்களுக்குத் தூய தமிழைத் துலக்கிக் காட்ட மலர்ந்திருக்கும் தென்மொழி தமிழரின் மாமருந்து. இதனை வளர்ப்பது ஒவ்வொரு தமிழனின் கடமையாகும்.

—''பகுத்தறிவு'' (திங்கள் இதழ்) கொழும்பு.

ஃ ஃ ஃ

உள்ளங் கவர்ந்தது!

...மொழிப் பேரறிஞர் ஞா. தே. அவர்கள் குறை கூறுவார் பார்வைக்கு நல்ல சாட்டையடி தருகின்றுர்கள். துரை. மாணிக்கனாரின் ''தமிழா! நீ எங்கே?'' செத்துக் கொண்டிருக்கும்

தமிழனைத் தட்டியெழுப்பத் தயங்காது. அதில் உள்ள பகுதிகள் யாவும் என் உள்ளத்தைக் கவர்ந்தன.

—புதுகை-சண்முகன், கோவை.

ஃ ஃ ஃ

கருத்துக் குவியல்!

தென்மொழி இதழின் ஒவ்வொரு பக்கமும் உயர்ந்த-சிறந்த கருத்துக் குவியலாக இருப்பதை உணர்ந்து உளம் மகிழ்கிறேன். இதைப் படிக்கும் எந்தத் தமிழ் மகனும் தமிழ்த் தாயின் தற்பொழுதைய இழிநிலையைப் போக்கத் தயங்கமாட்டான் என்று உறுதி கூறுகிறேன். ஆசிரியவுரை கருத்துச்செறிவும் பொருட்செறிவும் கொண்டு மிளிர்வதைப் பாராட்டுகிறேன்.

—கோவி-அரசு, கோவில்செனை, திருச்சி.

ஃ ஃ ஃ

கவினுரை!

கற்றறிந்தார் செறிந்தடர்ந்த தமிழர் நாட்டின்
கன்னல்மிகு தென்மொழியின் கவினு லாவை
உற்றவர்கள் உவந்தேற்ற ஒருநொ டிக்குள்
ஓரிலக்கம் தென்மொழியை உயிர்ப் பாட்டாமே
பெற்றநிலை நினைப்பதற்கும் நெஞ்ச டைக்கும்;
பெருந்தமிழாற் பேசுதற்கும் நாவ டைக்கும்;
இற்றைநிலை நீடுயர்ந்தால் தமிழ னென்றோர்
இனஞ்சாகும்; அனைவருமே நாணல் வேண்டும்!

—அழ. அழகிரிசாமி, ஈப்போ.

ஃ ஃ ஃ

ஓர் அறைகூவல்..!

...சித்திரை இதழ் ஆசிரியவுரை இந்தி வெறியர்களுக்கு ஓர் அறைகூவல்."தமிழ் தனித்தியங்குமா?" தமிழின் சிறப்பினையும் உயர்வினையும் படம் பிடித்துக் காட்டுகின்றது. "ஊமைத் தமிழர்" பாடல் நெஞ்சைத் தொடுகின்றது. "தன்னுணர்வு" என்னை உணர்ச்சியுள் ஆழ்த்தியது. தென்மொழியை வையத்திற்கு வழங்கும் தங்களுக்கு என் உளங்கனிந்த நன்றி.

—ஏ. வி. கண்ணன் பெங்களூர் 2.

ஃ ஃ ஃ

சாலப் பயனுடையது!

தென்மொழி பொழியும் தனித் தமிழ்த் தேன்மொழி நலம் மிக்க சுவைதரக், கண்ணுற்று உவகைக் கடலுள் ஆழ்ந்தேன். என்போலும் ஆர்வலர்க்கு நம் தென்மொழி சாலப்பயனுடைத்து. வாழிய தென்மொழி.

—மு. ஆனந்தராசன், பெல்காம்.

ஃ ஃ ஃ

வீறு நடை!

இனிய செந்தமிழ் நடையில் பொருட் குவியல்கள் பல மிடைந்து ''தென்மொழி'' வீறு நடை போடுவது கண்டு எல்லை யற்ற மகிழ்ச்சி.

—வ. தியாகராசன், மதுரை 1.

ஃ ஃ ஃ

வருக, வாழ்க!

மாங்கனி பலாவும் வாழை
முக்கனிச் சுவையின் ஒக்க
தாங்கனித் தமிழே! எங்கள்
தென்மொழி! வருக! வாழ்க!
ஆங்கிலம் வடசொல் இந்தி
அரக்கியைப் புகுத்தி அன்னை
ஓங்கிடல் இன்றிச் செய்தார்
ஒழித்திடல் உன்னிச் செய்க!

—தென்மொழியன்பன், மகிழரசன், பெல்காம்.

ஃ ஃ ஃ

அருட்பிரகாசர் தமிழ்!

செந்தமிழ்ப் பாலில் சிதறும் நஞ்சென
வந்து புகுந்த வன்சொற் களைந்தே
அருட்பிர காசர் அளித்திடுந் தீஞ்சுவை
நறும்பால் போன்ற நன்னடை ஏடு!
நன்னூல் தென்மொழி நாட்டமி லாதர்
பன்னூல் பயின்றும் பயனென் கூறுவீர்!

—பெ. இராசசுந்தரம், திருவகீந்திரபுரம்.

ஃ ஃ ஃ

மொழி பெயர் முறை

ஒரு மொழியிலுள்ள சொற்களை அல்லது குறியீடுகளை வேறுமொழியில் பெயர்க்கும் முறைகள் ஐந்தாம். அவையாவன:-

1. நேர்ச்சொல். (எ. டு: pen – தூவல்)
2. வேர்ப் பொருட் சொல். (எ. டு: motor – இயங்கி)
3. சிறப்பியற் சொல். (எ. டு: train – புகை வண்டி)
4. ஒப்பொலிச் சொல்.
5. முதலெழுத்துச் சொல்.



இவற்றுள், முதலது முன்னமேயுள்ள சொல். ஏனைய வெல்லாம் புதிதாய் ஆக்கப் பெறுவன.

இவ் வைவகையுள், முதல் மூன்றும் ° "தமிழ் தனித்தியங்குமா?" என்னும் முந்திய கட்டுரையிற் கூறப்பட்டுள. ஏனையிரண்டே இங்குக் கூறப்பெறும்.

ஒப்பொலிச் சொல்லாவது, ஒலியிலும் பொருளிலும் ஒக்குமாறு அமைத்துக் கொள்ளப் பெறும் சொல்.

எடுத்துக்காட்டு:

ஆங்கிலம்.	தமிழ்.
Parliament	பாராளுமன்று.
bracket	பிறைக்கோடு

Parliament என்பது பேசுங்களம் என்று பொருள்படும் தனிச்சொல் (ஒரு சொல்). பாராளுமன்று என்பது பாரை ஆளும் மன்று என்று பொருள்படும் முச்சொற்றொடர்.

மொழிப் பெரும் புலவர்
ஞா. தேவநேயப் பாவாணர் எம்.ஏ.

° தென்மொழி சுவடி 1. ஓலை. 3 - ஐப் பார்க்கவும்.

Parler என்பது பேசு என்று பொருள்படும் பிரெஞ்சு வினைச் சொல்; ment என்பது ஒரு பிரெஞ்சுத் தொழிற் பெயரீறு.

ஆகவே, இவ்விரு சொற்கட்கும் எள்ளளவும் தொடர்பில்லை ஆயினும், ஒலியிலும் பொருளிலும் பேரளவு ஒத்திருக்கின்றன.

Braccal என்பது breeches (குறுங்காற் சட்டைகள்) என்று பொருள்படும் இலத்தீன் சொல். Braga என்பது அதன் இசுப்பானியத் (Spanish) திரிபு. Braguetа என்பது அதன் குறுமைப் பொருள் வடிவம் (diminutive). அதனின்று முதலில் bragget என்றும், பின்னர் bracket என்றும், ஆங்கிலச் சொல் திரிந்தது.

பிறைக் கோடு என்பது பிறைபோல் வளைந்துள்ள கோடு என்று பொருள்படும் இரு சொற்றொடர்.

இவற்றிற்கும் ஒரு தொடர்புமில்லை. ஆயினும், ஒலியும் பொருளும் ஒத்துள்ளன. இங்ஙனம் அமைதல் மிக அருமை யாதலின், ஒரு சில சொற்கள் தாம் இம் முறையில் அமைக்கப் பெறும்.

முதலெழுத்துச் சொல்லாவது, ஒரு பொருளைப் பற்றிய வண்ணனைச் சொற்கள் முதலெழுத்துக்களைமட்டும் சேர்த்து ஒரு பெயர் அல்லது குறியீடு அமைத்தல்.

எ. டு: radar.

இது, radio detection and ranging என்னும் நாற் சொல் முதலெழுத்துக் கோப்பு. இம்முறை பற்றியே, கதிரியத் துப்பறிவும் **வீச்சீடும்** என்னும் முச்சொற்களின் முதலெழுத்துக் களைச் சேர்த்துக் **கதுவீ** என்றோ, (வானூர்தி மரக்கலம் கடற் கரை முதலியவற்றின்) **வாக்கும்** (direction) **வீச்சும்** (range) **காணி** என்னும் பொருளில் **வாவீணி** என்றோ, அமைத்துக் கொள்ளலாம்.

ஆங்கிலக் குறியீடுகளெல்லாம் பொருளளவில் பெருவளங் கொண்டன வேனும், சொல்லளவில் மிக எளிய முறையிலேயே அமைந்துள்ளன. மேற்கூறிய ஐம்முறைகளையும் கையாளின் எல்லா அறிவியற் குறியீடுகளையும் தமிழில் எளிதாய் மொழி பெயர்த்து விடலாம். தாய் மொழிப் பற்றொன்றே தேவை. ○

குரங்கு வாயில்!

துரை-மாணிக்கம்

வரிமணல் தென்துறை கண்டுமீள் வெண்மலை வானரங்காள்!
நரியனை யார்வந்து தாழ்த்திய செந்தமிழ் நாட்டினின்று
கரியனை யாரொரு கோடியர் சொன்னதாய்த் தாய்தமிழை
அரியணை ஏற்றுவீர் என்றுரைப் பீர்தில்லி ஆளுநர்க்கே!

இந்திக்கு மேலுடை இட்டணி பூட்டி இளையவர், மூன்
தந்திமி தீமென ஆடவைத் தீர்தமிழ்ப் பாவையட்கே
கந்தைதந் தீர்;இகழ்ந் தீர்;ஒழிந் தீர்;திறங் காட்டுமுன்னம்
முந்திக்கொள் வீரென ஓதுவீர் தில்லி முகாமையர்க்கே!

மந்தையென் றுநினைத் தீர்தமிழ் மக்களை; மாண்டமிழ்த்தாய்,
தந்தையற் கேபிறந் தோமெனில் இந்தத் தமிழகத்தைச்
சந்தையென் றேநினைத் திங்குவந் தார்திறஞ் சாவெடுப்போம்;
விந்தையன் றேயெனக் கூறுவீர்; ஆட்சி விளைப்பவர்க்கே!

என்நினைந் தாரவர்; இந்தித் திணிப்பை யணுவணுவாய்
முன்னிணைத் தெந்தமிழ் முற்றுமி லாது முழுதழித்தே
தன்னினத் தாரர சாண்டிட எந்தமிழ்த் தாய்பயந்த
தென்னினத் தாரழி வாரெனத் தீக்கனுக் காண்குநரே.

பார்க்கு மிடந்தொறும் நெல்முதிர் பைம்பயிர் சூழ்வயல்கள்!
ஆர்க்குஞ் செழுங்கடல் முப்புறம்! வானில் அகன்மலைகள்!
ஈர்க்கும் பிறன்பொருள் வேண்டுவ தில்லை;யிங் கீநுழைமோ?
ஆர்க்குமிங் கஞ்சுதல் இல்லையென் பீரந்த ஆளுநர்க்கே!

வல்லன் அமெரிக்க னேபிற னேவரும் வாய்ப்பிருப்பின்
வெல்லரி தென்றே விளம்புவர் கோழையர்; வீழ்ச்சியெனின்
சொல்லலும் வேண்டுமோ? நீணிலம் முற்றுமே சேர்ந்தொழிமே!
அல்லல் விளைப்பவன் தானும் அழிமென் றவர்க்குரைமே!

ஊரை வளைத்தே உணர்வழித் தான்றோர் உயர்வழித்துச்
சீரை யழித்து மொழியை யழித்துச் சிறப்பழித்துப்
பேரை யழித்துப் பிழைப்பழித் தேயினம் பின்னழிக்க
ஆரை நினைத்திவண் அண்டினர் என்றே அறைகுவிரே!

இணங்கார் எனின்தமிழ்க் காளையர் தோள்கள் எழுந்தெதிர்க்கும்;
வணங்கார் எனின்தமிழ்ப் பெண்டிர் மலர்க்கைகள்
வாளெடுக்கும்!
நிணங்காண்! தசைகாண்! குருதியின் செந்நிறங்
காண்!எதிர்த்தார்;
பிணங்காண்! எரிகாண்! பொடிகாண்! பின்னெழும்
பைந்தமிழே!

ஆர்வலர்! செந்தமிழ் ஆண்மையர்! முன்வரும் ஆர்படைக்குஞ்
சோர்விலர்! தாழ்விலர்! சோற்றுக்கு மானந் தனைவிடுக்கார்!
ஏர்வலர்! வாழ்க்கைத் தொழில்வலர்! அன்னார் எழுந்துவிட்டால்
போர்வலர் ஆயினும் பொன்றுவர்; என்றங்குப் போயுரைமே!

குமரிநீ ராடிக் குளிர்ந்தகுற் றாலப் புனலருந்தி
இமையப் பொருவரைக் கேகுங் குரங்குகாள்! எந்தமிழ்நாட்
டமைவினை வேண்டினர் ஆயிர மாயிரஞ் செந்தமிழர்;
தமைத்தவிர்த் தீர்;தவிர்த் தீர்உயிர்! என்றே தகவுரைமே!

—*—

தமிழ் மொழியின் சொல்வளம்

மாலை வகை

கண்ணி: இரு இரு பூவாக இடைவிட்டுத் தொடுத்த மாலை.
தொங்கல்: தொங்கல் விட்டுக் கட்டிய மாலை.
தார்: கட்டி மாலை.
கதம்பம் அல்லது கத்திகை: பலவகைப் பூக்களால் தொடுத்த மாலை.
படலை: பச்சிலையோடு மலர் விரவித் தொடுத்த மாலை.
தெரியல்: தெரிந்தெடுத்த மலரால் ஆய மாலை.
அலங்கல்: சரிகை முதலியவற்றால் விளங்கும் மாலை.
தொடலை: தொடுத்த மாலை.
பிணையல்: பின்னிய மாலை.
கோவை: கோத்த மாலை.
கோதை: கொண்டை மாலை.
சிகழிகை: தலை அல்லது உச்சி மாலை.
சூட்டு: நெற்றி மாலை.
ஆரம்: முத்து மாலை.

— ஞா. தே.

தமிழின் போராட்டம்.

புலவர். தி. நா. அறிவு ஒளி.

—:—

செந்தமிழ் மொழிக்குக் கடந்த ஈராயிரம் ஆண்டுகளாகவே மிகச் சிக்கலான நெருக்கடி நிலை இருந்து வருவது நம் மனையோருக்கு வருத்தமளிப்பதேயாகும். மொழி வரலாற்றைக் கூர்ந்து ஆராய்ந்து பார்ப்போர் தமிழ் மொழி அமைதியான ஊமை உயிர்ப் போராட்டத்தில் ஈடுபட்டு வருவதை அறிவர்.

தமிழ்மேல் வடமொழியின்முதல்தாக்குதல் கழகக்காலத்தின் பிற்பகுதியில் துவங்கியது ஆயின் அப்போழ்து தமிழின் பேராற்றல் மிகுந்திருந்தது. எனவே ஆற்றல் குறைந்த வடமொழி ஒன்றும் செய்ய முடியாமல் பின் வாங்கியது. கபிலர் போன்ற தமிழார்வலர்கள் அன்று தமிழ்க் காவலர்களாக விளங்கினர். அக்கபிலர் ஆரியர் அறிவதற்காகவே தமிழ் மொழியின் மெய்யுணர்வு வளம் பழுனிய அகப் பொருள் நுட்பமும், இயற்கையெழில் ஒட்பமும் செறிந்த 'குறிஞ்சிப்பாட்டை' இயற்றி 'வடமொழிப் பித்தர்' தம் பித்தைத் தணிவித்தார். தமிழின் அரும் பெரும் இலக்கண - இலக்கிய வளத்தையும் ஆற்றலையும் கண்டு வியப்பும் திகைப்பும் அடைந்த வடமொழிவாணர்கள் தமிழைப் பயில முனைந்தனர்.

பண்டைத்தமிழர், பிறமொழியாளர் திருந்தித் தமிழ் கற்பதாக எண்ணியோ என்னவோ வாளாவிருந்தனர்.

எப்படி அரசியலில் ஊடுருவும் முறையில் அகத்துறைப் போர் மூட்டி எதிரியை வீழ்த்தி விடுகின்றனரோ, அதே சூழ்ச்சியைக் கையாண்டு தமிழ் மொழிப் புலமை பெறும் ஊடுருவலை வடமொழிப் பற்றுளர் செய்தனர்.

தமிழ் மொழியின் நலன், மொழியமைதி, இலக்கணம், மரபு, கொள்கை, எழுத்துருவங்கள், யாப்புவளம், இலக்கியப் பண்பு, மொழியியல் நுட்பங்கள், கருத்துகள் ஆகியவற்றையெல்லாம் கவர்ந்து தாம் எழுதிய வடமொழி நூற்களில் சேர்த்துக் கொண்டனர். மொழிப் பயிற்சியால் நட்புறவு தமிழர்க்கும் வடமொழியார்க்கும் மிகுந்தது. நல்லுணர்வொன்றே கொண்டு உறவாடிய தமிழர், நட்புறவால் பிறர்க்குப் பல்வகையிலும் விட்டுக்

கொடுத்து வாழலாயினர். 'இருவர் நட்பில் ஒருவர் பொறை' என்ற நட்பிலக்கணத்தைத் தமிழர் மட்டும் மிகக் கண்மூடிப் போற்றியொழுகினர்.

வடமொழிவாணர் அரசியல், மன்பதை முதலிய துறைகளில் தம் செல்வாக்கைப் பல்லாற்ருனும் மிகுதியாக்கிக் கொண்டனர். ஆட்சித் துறையில் தம் அறிவுரையே முதலிடம் பெறுமாறு நம்பும் மனப்பான்மையை உருவாக்கிக் கொண்டனர்.

இந்நிலையில் தமிழினத்தின் தனித் தன்மை சான்ற பொற்காலப் பகுதி ஒரு முடிவுக்கு வர, இருண்ட வரலாற்றுக் காலப் பகுதி சூழ்ந்தது.

இதன் பின் தமிழ்க் கழகம் மறையவும், தமிழ்ப் புலவர்கள் கலைகண் இன்றி அல்லலுறவும், பிற ஆட்சியாளர்களும், பிற மொழியாளர்களும் செல்வாக்குப்பெறவும் கூடிய நிலை அமைந்து விட்டது. க ள ப் பி ர ர் க ள் வடமொழியின் காவலர்களாகித் தமிழைப் புறக்கணித்து அழித்தனர்.

அன்று தொடங்கிய வீழ்ச்சி நிலை - போராட்ட நிலை – இன்னுங்கூடச் செம்மையாகத் தீரவில்லை! வட மொழிச் செல்வாக்கு பல்லவர்களாலும் போற்றப்பட்டது. அங்கும் தமிழுக்கு முதலிடமில்லை. பெரும்பான்மைப் பொதுமக்கள், பேச்சு வழக்கு மொழியாக இருக்கவே அருந்தமிழைப் பயன் காரணமாக ஒரு கருவியாகப் பயன் படுத்தினர். பல்லவ அரசருள் ஓரிருவர் தமிழுக்கு ஓரளவு மதிப்பளித்தனர் எனினும் பெரும்பாலோர் வடமொழி அடிமைகளே. மகேந்திரவர்மனும் இராச சிம்மனும் குறிப்பிடத் தக்க வடமொழிப் பற்றுளர்களே. பல்லவர்கள் வடமொழிக் கல்லூரிகளை அமைத்து, அம்மொழியை ஓம்பிய அளவு தமிழைப் பேணிப் புரக்கவில்லை. சில வரலாற்ருசிரியர்கள் இவ்வுண்மையை மழுப்பப் பார்ப்பது ஏன் எனப் புரியவில்லை.

ஆயின் திருநாவுக்கரசர் போன்ருர் சமயத் தொண்டு செய்வதற்காகப் பொதுமக்கள் மொழியாகிய தமிழுக்கு முதலிடம் நல்கினர். அவர்கள் செய்த தொண்டே மொழி வளர்ச்சிக்கு அப்பொழுது உறுதுணையாக இருந்தது. இது போன்றே ஆழ்வார்கள், சமணர்கள் மொழித் தொண்டுமாகும். இம் மொழித்

தொண்டர்களும் வடமொழிக்கு ஒரு முறை வணக்கம் செலுத்திய பின்பே தமிழைத் திரும்பிப் பார்த்தனர்.

அன்று தொடங்கி இன்று காறும் வாழ்ந்து வரும் அடிமை மனப்பான்மையே அதிர்ச்சியையும் வருத்தத்தையும் தருகிறது.

வடமொழிச் செல்வாக்கு சோழர் – பாண்டியர் காலத்தில் ஓரளவு இருந்ததெனினும், தமிழின் செல்வாக்கு ஓரளவும் வளர்ந்திருந்தது. சோழர் பாண்டியர் காலத் தமிழ்க் கல்வெட்டுகளும், காப்பியப் படைப்புகளும் தமிழ் மொழியின் மறுமலர்ச்சிக்கு உதவின. இப் பருவத்தில்தான் தமிழ் புது உருவமெடுத்து இன்றைய மொழி நிலைக்குத் திசை மாறியது.

பின்னர், தமிழ் பாரசீகம், தெலுங்கு, கன்னடம், மலையாளம், உருது, மகாராட்டிரம், பிரெஞ்சு, டச்சு, போர்த்துகீசு முதலிய மொழிகளோடெல்லாம் போராடி உயிரைக் காத்து வர வேண்டிய நிலை அமைந்தது.

எந்த எந்த மொழியினர் அரசியலில் செல்வாக்குப் பெறுகிறார்களோ, அந்த அந்த மொழியினரின் மொழிகளோடெல்லாம் தமிழ் மோதிப் போராடி உயிர் பிழைக்க வேண்டிய அவல நிலையில் இருந்துவந்திருக்கும் உண்மையான வரலாற்றை, உண்மையான நடுநிலையோடு பயில்பவர் அறிவர்.

இன்று ஆங்கிலச் செல்வாக்கோடும், இந்தித் தாக்குதலோடும் போரிட வேண்டிய இழிநிலை–நாணத்தக்க நிலை-உயர்தனிச் செம்மொழியாகிய தமிழ்க்கு அமைந்துள்ளது.

தமிழர் எனத் தம்மை நம்புபவர் யாவரும் இவ்வவல நிலையை ஒரு சிறிது எண்ணிப் பார்க்க வேண்டும். தமிழ், களைகளாலும் வேலிகளாலும் நெருக்கப்பட்டு, நசுக்கப்பட்டு கூனிக்குறுகிக் குன்றிய செடியாகவே வாடிக் கிடக்க வேண்டுமா? அன்றி, வானுற ஓங்கி வளம் பல கிளைத்து, வண்ணமும் வடிவும் எண்ணமும் எழுச்சியும் மிக்க எழிலோடு பொலிய வேண்டுமா? என எண்ணி முடிவு செய்ய வேண்டும்.

தமிழ் வளர்ச்சி ஏன் வியக்கத்தக்க வகையில் உருவாகவில்லை யெனின், அது எதிர்ப்புகளைத் தாங்கிப் போராடிப்

போராடியே வளர வேண்டியிருப்பதே. உரிமையோடு தன் முனைப்பாக வளரும் வாய்ப்பும், வளர்க்கும் வாய்ப்பும் தமிழுக்கு அமைய வேண்டும். அதற்குப் பிறமொழித் தாக்குதலோ, தடையோ, குறுக்கீடோ அணுவளவும் இருத்தல் கூடாது. பிற மொழித் திணிப்பு தமிழ் மொழிக்குக் கட்டாயம் தீங்கு செய்யும். தமிழ் நாட்டில் வேறு எந்தப் பிறமொழிக்கும் தனிச் செல்வாக்கு இருக்கக்கூடாது. தமிழ் ஒன்றே அனைத்துத் துறையிலும் முழு நிறை ஆற்றலோடு உரிமையோடு செங்கோலோச்ச வேண்டும்.

அதற்குத் 'தனித்தமிழ்'க் கொள்கை நனி இன்றியமையாத தாகும். தனித் தமிழ்க் கொள்கை ஒன்றே உண்மையான – நேர்மையான – அறக் கண்ணோக்கில் ஒழுக்கமான மொழியாக் கத்தை வளர்த்தது; வளர்க்கிறது; வளர்க்கும்!

தமிழ் நாட்டினர் 'தனித் தமிழ்க் கொள்கை'யை ஓர் உயர் பேரறமாகக் கருதிப் போற்றியொழுக முனைதல் வேண்டும். தனி வாழ்க்கையில் ஒழுக்கத்தை எவ்வாறு உறுதியாகக் கடைப்பிடித் தொழுகுவது மிக மிக இன்றியமையாததோ, அவ்வாறே தனித் தமிழ் ஒழுக்கம் மொழித் துறையில் போற்றப்படவேண்டும்.

பேச்சிலும் எழுத்திலும் தூய்மைக் கற்பு வேண்டும். இக் கொள்கையை மறுப்போர், எள்ளுவோர், புறக்கணிப்போர் தமிழ்ப் பகைவர்களே என்பதைத் திண்ணமாகத் தமிழர் உணர வேண்டும்.

வடமொழியால் தமிழ் அணுவளவும் வளரவும் இல்லை; சிறக்கவுமில்லை. இவ்வுண்மையைக் கூறக்கூட அஞ்சும் கோழை யர் தமிழ் அறிஞர் எனும் பெயர் சுமந்து கிடப்பது வியப்பினும் வியப்பே!

தமிழ்ப் பகைவர் சிலர் வடமொழியால் தமிழ் சிறப்படைந்த தென நெஞ்சில் நஞ்சோடு பொய் புனைந்துரைப்பது எத்துணை கொடுங்கயமை காண்மின்! இவர்களை அறமொன்றே காக்க வேண்டும்.

வடமொழியை அதனளவில் வளர்ப்போர் வளர்க்கட்டும். அதைப் பிற மொழிகளில் வலியத் திணித்து ஏனைய மொழிகளைச்

சிதைப்பதே மடமை சான்ற செயலாம். இம் முயற்சியில் ஒரு திருக்கூட்டத்தார் மிக முனைந்தீடுபட்டுத் தமிழின் எழிலையும் ஏற்றத்தையும் இழித்திட முனைதல் கண்டிக்கத் தக்கது மட்டு மன்று; ஒறுக்கத் தக்க குற்றமுமாகும். இனைய குறுமதி யாளர் சிறுபுலைச் செயலை எஞ்ஞான்றும் நற்றமிழர் வரவேற்கக் கூடாது.

'தமிழ் எழுத்தாளர்கள்' என்று தம்மைக் கூறிக்கொள்ளும் சிலர், தமிழ்ப் பகைவர்களாக – ஒப்பற்ற தமிழ் வணிகர்களாக – விளங்குவதைக் கண்டு தமிழார்வலர் நல்லகம் நனிவருந்துவ தியல்பே. அந்தோ! தமிழே! உன்னால் வயிறு வளர்க்கும் இந்நல்லார் உன்னையே கொலை செய்யவும், உனக்கே இழுக்குத் தேடி வருத்தவும், உன்னையே இழிக்கவும் பழிக்கவும் முனைந்து மடிதற்று முன்வந்திடக் காண்கிறோமே! இவர்கட்கும், நீ அருள் காட்டுகின்றாய்! இரக்கம் காட்டுகின்றாய்! இவர்களையும் வாழ வைக்கின்றாய்! உன் பேரிரக்கப் பேரருள் மாண்புதான் என்னே! வாழ வைப்பவர்களைத் தாழ வைப்பவர்களா நன்றிக் கடப்பா டுணரும் நல்லார்?

இனைய மொழிக் கலப்பாளர்கள் தமிழைத் தம் தாய்மொழி யென்று மனமாற நம்பவில்லை என்ற உண்மையைத் தான் அன்னார் எழுத்தும், பேச்சும், செயலும் பிறவும் உணர்த்துகின் றன. இவ்வுண்மையை நான் அழுத்தந் திருத்தமாகக் கூறவிழை கிறேன். இத்தகையாரைக் குறித்துத் தமிழ் மக்கள் விழிப் போடு இருக்கவேண்டும்.

இக்கூட்டத்தார், தாங்களே நேர்மையின் உருவங்கள் போலவும், தாங்களே நடுநிலைமையாளர் போலவும், வெளிக்கு நடித்துப் பேசி எழுதிக் காட்டிக் கொண்டு மறைமுகச் சூழ்ச்சி களும் மாண்பில் கயமைகளும் விளைவிப்பதைக் காணும் பொழுது நல்லார் உள்ளம் கொதிக்காதா? இப் புல்லியரின் மறைசெயலை நல்லறிஞர் சிலர் வெட்ட வெளிச்சமாக்கிக் காட்டிவிட்டால் அவ்வருந் தமிழ்த்தொண்டர்களை இவர் குற்றவாளிகள் என்றும், இன வேற்றுமையைக் கிளறிவிடும் தீயவர் என்றும் ஆராய்ச்சி அறிவற்றவர்கள் என்றும், தமிழ் வளர்ச்சிக்குத் தடை போடுபவர் என்றும் பலவாறாக இழித்தும் பழித்தும் பேசி எழுதி ஏமாற்றி

வருகின்றனர். தமிழ்ப் பற்றுல் மற்ற மொழியைப் பழிக்கக் கூடாது என அடித் தொண்டையால் கூவுகின்றனர். இவர்களுக்கு ஏன் மற்ற மொழிகளின்மீது ‘இவ்வளவு பரிவும் அன்பும்?’ இதுதான் எண்ணுதற்குரியது. தமிழ் மொழியை இவர்கள் குறை கூறுவது நேர்மையாம்; அறமாம்! ஆனல் மற்ற மொழிக் குறையை எடுத்துக் காட்டக் கூடாதாம்! இதிலிருந்து ‘இவர்களின்’ உண்மை உருவம் புலப்படுகிறதல்லவா? இவர்களுக்குத் தமிழ்ப் பற்று இருக்கிறதா? இல்லையா? என்பதை இதிலிருந்து அறியலாமன்றோ?

உண்மைக் குற்றவாளி, குற்றமற்றவரைக் குற்றவாளியாக்கும் கொடுமை தமிழ் நாட்டில் நெடுங்காலமாக வழக்கத்திலிருக்கிறது. இவ்வுண்மைகளை உணர முடியாத ஏமாந்த தமிழர் சிலர் அக்கயவரின் சொற்களை ‘மெய்யென’ ஆய்வறிவின்றி நம்பித் தாமும் கெட்டுத் தக்கோரல்லாதாருக்கும் வலிமையூட்டித் தமிழ் நாட்டையும் கெடுக்கின்றனர். ஏன்? தங்களை அறியாமலே தமிழகத்தைக் காட்டிக் கொடுக்கின்றனர்!

இந்நிலையில் தமிழிளைஞரும் தமிழ் மகளிரும் கைக் கொண்டொழுக வேண்டிய முறை யாது? தமிழர் மிக விழிப்போடு வாழ வேண்டும். தமிழ்ப் பற்று, தமிழ்ப் பண்பு போற்றல், தமிழ் நாகரிகம் பேணல், தமிழ் ஒழுக்கம் ஓம்பல், தமிழ் நெறி ஒழுகல், தமிழ்க் கலைகளை வளர்த்தல், தமிழ் அறிஞர்களை வாழ்த்திச் சிறப்பித்து வளர்த்தல், தமிழ்க் கலையொழுக்கத்தை தனிமையிலும், பொதுத்துறையிலும் மதித்துக் கைக்கொள்ளல், தமிழார்வமுடையோராகத் தம் குழந்தைகளை வளர்த்தல், தமிழைத் தமிழரைத் தமிழ் நாட்டை உயிரினும் மேலாகக் காதலித்தல், தம் மனை, மக்களுக்கு இனிய தமிழ்ப் பெயரைச் சூட்டல், நாடோறும் தமிழிலக்கியங்களைத் திருக்குறளை ஓதி உணர்தல் ஆகிய கடமைகளைத் தவருது செய்து வருதல் வேண்டும்

தமிழ்ப் பகைவர் திட்டங்கள் செயற்படாதவாறு விழிப்போடிருந்து தமிழர் ஆக்கத்துக்கும் தமிழாக்கத்துக்கும் முனைப்போடு உழைக்கவேண்டும்.

தமிழின்பால் உண்மையான காதலோ, ஆர்வமோ இல்லாதவர் இலக்கிய உலகில் செல்வாக்குடையோராக உள்ளனர்.

அதனால்தான் இலக்கிய உலகு சீரழிந்து கிடக்கிறது. குறிப்பாக வடமொழி வெறியர் 'தமிழ் எழுத்தாளர்' என்ற பெயரைச் சூட்டித் திரிகின்றனர். தமிழ் எழுத்துகளை எழுதக் கற்றுக் கொண்டதாலேயே தமிழ் எழுத்தாளர்களானவர்கள் இவர்கள். தமிழை முறையாக – ஆழமாகப் – பயிலாமல் மேல் நோக்கில் மேய்ந்து உயிர் உறிஞ்சி வயிறு வளர்ப்பவர்கள். இவர்கள் தமிழ் வளர்ப்பது, புலால் உணவுக்காரன் ஆடு – கோழி வளர்ப் பதைப் போன்றதே!''

'வடமொழி வெறி' நேர்மையை மதிக்காதது; உண்மைக் கஞ்சாதது; அறத்தை நம்பாதது; தன் களி வெறிப்பிலேயே திளைத்துக் கிடப்பது. வடமொழி வெறிக்கு அறமும் நடுநிலையும் உண்மையும் ஆகாப்பகையே போலும்! இம்முடிவையே வட மொழி ஆர்வலர்களின் பேச்சும், செயலும், எழுத்தும், சூழ்ச்சி களும் நிலைநாட்டுகின்றன. வருங்காலம் இத்தகையோர்க்கு நல்ல தீர்ப்பை வழங்கப் போகிறது. தற்காலப் புயல் ஒடுங்கியே தீரும். திண்ணம்.

தமிழ், வடமொழியோடும், ஆங்கிலத்தோடும், இந்தி யோடும், புல்லியர் சிலரோடும் போராடும் போராட்டத்தில் வெற்றி பெற்றே தீரும். எந்த மொழியின் கொடுங்கோன்மைக் கும் உண்மைத் தமிழர் இடமளிக்கவே கூடாது. தமிழின் போராட்டம் அதன் வெற்றி வாழ்க்கைக்கும் முன்னேற்றத் துக்கும் உதவுவதேயாகும். தனித் தமிழர்கள் அதற்கு உதவி செய்யவேண்டும். வெல்க தமிழ்!

சொல்வளம்.

நிலம்

புறம் போக்கு:	பண் படுத்தப் படாத அரசியலார் நிலம்.
தரிசு:	பயிர் செய்யப் படாது புல் முளைத்துக் கிடக்கும் நிலம்.
சிவல்:	சிவந்த (செம்மண்) நிலம்.
கரிசல்:	களிமண் நிலம்.
முரம்பு:	கல் நிறை நிலம் அல்லது சரள் நிலம்.
சுவல்:	மேட்டு நிலம்.
அவல்;	பள்ளமான நிலம்.

ஞா. தே.

திருத்தம்: 14-ஆம் பக்கம் முதற் பாட்டின் 4-ஆம் வரி, 4-ஆம் சீரை 'பிணையெழும்' என்று திருத்திப் படிக்க.

மொழிக் காப்பு.

—:—

இக்காலத்தே தமிழிற் போதிய சொற்களில்லை என்று குறை கூறுதலும் வழக்கற்ற சொற்களைப் புதுக்கக்கூடாதென்று தடை செய்தலும் ஒருங்கே நிகழ்கின்றன. தமிழாட்சியும் மாட்சியும் நீங்கி எத்தனையோ நெடுங்காலம் கழிந்த பின்னும், இக்காலக் கருத்துக்கட்கேற்ற சொற்களும் சொற்கருவிகளும் தமிழில் மலிந்துள்ளன. பல தமிழ்ச் சொற்கள் வழக்கற்றமைக்குக் காரணம் அயலாரால் புகுத்தப் பெற்ற ஏமாற்றுக் கொள்கை யாதலின், அவற்றைப் புதுக்குதல் தமிழர் கடனும் முறைமையு மாகும்.

ஒரு நாட்டுச் செல்வங்களுள் மொழியும் ஒன்றாகும். மொழித் துணையின்றி ஒரு நாட்டார் நாகரிகமாகவும் தேவை நிரம்பியும் வாழ்வதரிது. முன்னோர் அரும்பாடுபட்டு ஈட்டிய அறிவுச் செல்வமெல்லாம், மொழிவாயிலாகவே போற்றப்பட்டு வருகின்றது. புல் என்றொரு பொதுப் பெயரையோ, அறுகு என்றொரு சிறப்புப் பெயரையோ, வா என்றொரு வினைச் சொல்லையோ, புத்தம்புதுவதாக ஒருவர் எங்ஙனம் ஆக்குதல் கூடும்? எத்துணைச் சொற்கள் சேர்ந்து ஒரு பெருமொழியும் அதன் இலக்கியமும் அமைகின்றன? முன்னோர் வைத்துப் போன சின்னஞ் சிறு பொருள்களைக் கூடப் பொன்னேபோல் போற்றுவது மக்கள் வழக்கமாயிருக்க தொன்று தொட்டு இன்று காறும் கணக்கற்ற தலைமுறைகளாய்த் தொடர்ந்தும் திரண்டும் வரும் அரும் பெருஞ் செல்வத் திரட்டாகிய மொழியை, எத்துணைக் கவனமாகவும் கண்ணியமாகவும் பேணுதல் வேண்டும்!

இடைக்காலத் தமிழரின் பேதைமையால், பாழான மண்ணிற்கும், படையான சிதலுக்கும், படியாதார் நெருப்பிற்கும் பதினெட்டாம் பெருக்கிற்கும், பற்பல பூச்சிக்கும் பகைவரின் சூழ்ச்சிக்கும், இரையான கலை நூல் சொற்கள் எத்துணை யெத்துணை? பல கலைகளிலுள்ள சொற்றொகுதிக ளெல்லாம் சேர்ந்தே ஒரு மொழியாகும். ஒரு கலைச் சொற்களைப் பிறிதொரு கலையிலும், ஒரு நூற் சொற்களைப் பிறிதொரு நூலிலும் காண்பரிது. திருவாசகம் இன்றில்லையேல், சாழல் தெள்ளேணம் முதலிய சொற்களை வேறெங்குக் காணமுடியும்? திருவாசகத்திலும் திருவாசகமான எத்துணை அருநூல்களும் பெருநூல்களும் இறந்து விட்டன. அவற்றிலுள்ள முழுமணிச் சொற்களனைத்தும் பெரும் பாழ்கடலுள் மூழ்கினவே! தொல்காப்பியம் ஒன்றில்லாவிடின் இற்றைத் தமிழர் நிலை என்னவாகும்? இவற்றையெல்லாம் தீர வெண்ணி, இறந்தனபோக எஞ்சிய சொற்களையேனும் இற்றைத் தமிழர் இறவாது காப்பாராக.

ஞா. தே.

— சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள்.

இறக்குமுன் வந்து பார்!

ஊருக்குப் போய்ச் சேர்ந்தாய்;
உள்ளத்தை அலைக்கின்றாய்;
உயிரே! இங்கே
யாருக்கு வேண்டுவன
யாப்பினிலே நாடோறும்
எழுதி, என்றன்
பேருக்கு நீ அனுப்பும்
முடங்கல்கள்? இனியும்நான்
பிழைக்க மாட்டேன்!
நேருக்கு நேர்வந்து
காணுகின்ற நினைவுமுனக்
கில்லை! போதும்! (1)

கண்மூடக் கனவாக
வருகின்றாய்! கண்திறந்தால்
கார்மு கில்கள்
விண்மூட விரிதல்போல்
நினைவலைகள் விரிக்கின்றாய்!
வேண்டி னோர்யார்?
மண்மூட மறைந்திடுவேன்;
மலர்முகத்தை நேர்வந்து
காட்டா விட்டால்,
''பெண்மூட மதிகொண்டாள்''
என்றெல்லாம் பேசவிட்டுப்
பிரிந்து போவேன்! (2)

வண்ணவண்ண மாயுன்றன்
வடிவழகை நிழற்படத்தில்
வடித்த னுப்பி
எண்ண எண்ணத் தொலையாவென்
எண்ணங்கட் கரண்செய்ய
இயலு மோகாண்?
உண்ணஉண்ணத் தெவிட்டாத
உன்னெழிலை நேர்வந்து
காட்டா விட்டால்
நண்ணநண்ண எட்டாத
நாடென்னை வரவேற்கும்
அறிவாய் நன்றே! (3)

புதுவை. சுப்பிரமணியன்.

நூற்சுருக்கம்

உரிமை.
(THE LIBERTY)

(இருபத் தோராவது அகவையில் திறமையான வழக்கறிஞராக நுழைந்து, தம் சொல் வன்மையால் விரைவில் மாநில நடுவராக உயர்ந்து புகழ் பெற்றவர் இராபர்ட் கிரீன் இங்கர்சால் (Robert Green Ingersol) என்பவர். அமெரிக்காவின் குடியரசுத் தலைவரின் ஆண்டு வருமானத்தைப்போல் இரண்டு மடங்குப் பணத்தைத் தம் சொற்பொழிவுகளாலேயே ஈட்டிப் பெரும் பொருள் தொகுத்தார். தொகுத்த பொருள்களை எல்லாம் ஏழை எளியவர்க்கு வாரி வழங்கிய பெருவள்ளலர் இங்கர்சால்.

இவர் அரசியல், பொருளியல், குமுகவியல் முதலிய பெருந் துறைகளிலும், மனவியல், அறிவியல், அறவியல், கலை முதலிய நுண் துறைகளிலும் பலபடப் புகுந்து ஆய்ந்து கரை கண்டவர். அந்தப் பட்டறிவாலேயே பல உயர்ந்த நூல்களை எழுதினர். அக்காலத்துச் சமய, அரசியல் கொள்கைகளைத் துணிவுடன் கண்டித்தமையால் இவரை **இறையிலி** என்று சிலர் குறை கூறினர். ஆனல் இவர் உயர்ந்த மெய்யுணர்வாளர் என்பதை உண்மையான சமய நூல் அறிஞர் கட்டாயம் ஒப்புவர்.

இக் கட்டுரைச் சுருக்கம், இவர் எழுதிய The Liberty of Man, Women and Child என்னும் ஆங்கிலக் கட்டுரைப் பொழிவின் தழுவலாகும்.

அறிவுத் தெளிவும் உணர்வுப் பெருக்கமும் கொண்ட இக்கட்டுரை, மாந்த வாழ்வின் உரிமைகளைப் பற்றிப் பல்லாற்ருனும் ஆய்ந்து, அறியாமைக்கும் ஆணையாட்சிகட்கும் போலிச் சமயங்கட்கும் கசையடி கொடுக்கின்றது.

இற்றைத் தமிழரின் போலி வாழ்க்கைக்கு இது ஒரு தடைக்கல்லாக அமைந்து, அவர் தம்மை நல்வழியில் திருப்பப் பெரிதும் உதவும் என்று கருதுகின்ருேம். உண்மை விளக்கத்தில் நாட்டமுறுவார் இதை விரும்பிப் படிக்க வேண்டுகின்ருேம்.

— **ஆசிரியர்.**)

அறிவிற்கும் உள்ளத்திற்கும் உரிமை:-

அடிமைத் தன்மை என்பது வேறொன்றுமில்லை. அறியாமையே. உரிமை என்பது அறிவின் குழந்தையேயாகும்.

தொடக்கக் காலத்தில் மாந்தன் அறியாமையின் கொடுமையான வல்லமையினால் அழுத்தப் பெற்றிருக்கின்றான். அரசர், சமயவாசிரியர்களின் கொடுங்கோலும் ஏமாற்றும் பெருகியிருந்து இவனை முன்னேறவிடாமல் தடுத்திருக்கின்றன. இயற்கையான விலங்குத்தன்மையையும் அறம்பிறழ்ந்த செயல்களையும் அறிவுப் போராட்டத்தால் வென்று முன்னேறியிருக்கின்றான். இன்றும் அவனைவிட்டு அவை விலகிவிடவில்லை. அவற்றின் கட்டுகளை இன்னும் முற்றும் அவிழ்ப்பதிலேயே தன் அறிவைச் செலுத்திக் கொண்டுதான் இருக்கின்றான்.

எல்லாவகை இடர்ப்பாடுகளிலிருந்தும் மாந்தன் தன்னை விடுவித்துக் கொள்ள முதன் முதலில் வேண்டப்படுவது அறிவுரிமையேயாகும். ஒரு காலத்தில் நூற் பயிற்சி, கருத்துப் பயிற்சி, அறிவியல் பயிற்சி முதலியன பெருங் குற்றங்களாகக் கருதப்பெற்று வந்தன. பொதுவாக மக்களின் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாக விருப்பவை அரசுகளும் கோயில் மடங்களுமே! முன்னவை அவர்கட்குக் கைவிலங்குகளாகவும், பின்னவை அவர்கட்கு உயிர் விலங்குகளாகவும் அமைகின்றன. ஆனால் இக்கட்டுகளை யெல்லாம் தகர்த்துவிட்டுத் தானாக எண்ணிப் பாராத மாந்தன் அடிமை ஆவான்; அவன் தனக்கும் பிறர்க்கும் கேடு செய்கின்றான். அறிவுக் கடலில் கப்பல்விட எவர்க்குந் தடையில்லை. அதுபோல் அறிவு வெளியில் எவர் வேண்டுமானாலும் பறந்து திரியலாம்.

அறிதற்கரிய ஓர் இறையாற்றலின் முன் எல்லார்க்கும் எண்ணிப் பார்க்கவும், எண்ணியதை வெளியிற் சொல்லவும் முழு உரிமை உண்டு. நாம் விரும்புகின்ற அடிப்படை உரிமையும் அதுதான். ஒன்றைச் சரியாகத்தான் கூறுகின்றோமா என்பதைப் பற்றிக் கவலைப் படவேண்டாம். நாம் எதை உண்மை என்று கருதுகின்றோமோ அதைச் சொல்ல நமக்கு உரிமை வேண்டும். மற்றப்படி நாம் உண்மையின் முழு வடிவத்தையும்

கூறிவிடுவதாக நடிக்கவுமில்லை. நம் கருத்துகளைத் தடை செய்வது அரசனானாலும் சமயங்களானாலும் அவற்றை நடத்து கின்றவர்கள் அறிவு நிரம்பிய திருடர்கள்; உரிமையைப் பறிக்கும் கொள்ளையர்கள் என்றே நான் கூறுவேன். உயிரைப் பிணித் திருக்கின்ற கட்டுகளை அவிழ்த் தெறியுங்கள். ஒன்றை எண் ணவும் வெளியிடவுமே நமக்கு மூளை தரப் பெற்றிருக்கின்றது. நாலைந்து பெயர்களோ எண்ணற்ற ஒரு கூட்டமோ சேர்ந்து கொண்டு சமயமென்றும், கட்டு திட்டங்கள் என்றும் கூறி உரிமையை நசுக்குவதையும், பத்துப் பதினைந்து பெயர்கள் சேர்ந்து ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டு சட்ட திட்டங்கள் என்றுகூறி வாய் விலங்கு கை விலங்குகள் பூட்டுவதையும் அடி யோடு தகர்த்தெறியுங்கள். அவர்கள் தாங்கள் மட்டும் உரிமை யுடன் வாழ விரும்புகின்றார்கள். நம்மை அறியாமைப் படுகுழி யில் தள்ளுகின்றார்கள். எவனொருவன் தான் பெற்ற மாந்த உரிமையைப் பிறர்க்குத் தர மறுக்கின்றானோ அவன் ஏமாற்றுக் காரன்; உரிமைத் திருடன்.

ஒருவனை எத்தனைக் கொடுமைகட்குட் படுத்தினாலும் அவன் எண்ணங்களையும் உரிமைகளையும் அவன் உயிரிணைப்பினின்று அவிழ்த்து விடமுடியாது. அவனைச் சுட்டெரித்த சாம்பலிலும் அவன் உரிமை வேட்கை மணந்து கொண்டிருக்கும். மக்கள் ஒவ்வொருவரும் தனித்தனிக் கருத்துகளைக்கூறுவதில் தவறில்லை. அவரவர் சொந்தக் கருத்துகளுக்கே மதிப்பளிக்க வேண்டும். அறிவிலும் பண்பாட்டிலும் கல்வி கேள்விகளிலும், விருப்பு வெறுப்புகளிலும், சுற்றுச் சூழல்களிலும் வேறு வேறாக உள்ள மக்கள் ஒரே வகைக் கட்டு திட்டங்களுக்கு உட்பட வேண்டு மென்று, நீங்கள் எப்படி வற்புறுத்த முடியும்? அறிவு வேற்று மைக்கு என்று உரிமை வழங்கப் படுகின்றதோ அன்றுதான் மாந்தன் முழு உரிமை பெற்றவன் ஆகின்றான்.

பழங்காலத்திலிருந்து அறிவின் மேல் அடக்குமுறை செலுத்தப்பட்டுள்ளது. கொடுமைகளால் அறிவு துன்புறுத்தப் பட்டுள்ளது. ஆட்சியாளர்களாலும் சமய நம்பிக்கைக்காரர் களாலும் அறிவுரிமை சிதைக்கப்பட்டிருக்கின்றது. அவற்றால் உண்மையைக் கைவிட்டவர்கள் கோடிக்கணக்காக விருப்பர். ஆனால் அன்றும் இன்றும் தாம்கொண்ட கருத்தில் ஒரு மயிரிழை

யும் பிறழாமல் அதற்காக உயிரையும் இழக்கத்தகும் பேருள்ளமும் பேரறிவும் படைத்தவர்கள் இல்லாமல் இல்லை. அத்தகைய பெருமக்கள் இருந்திராவிட்டால் இன்று நாம் காட்டுமிராண்டிகளாகவே இருந்திருப்போம். இத்தகையவர்கள் என்றும் நமக்கு வழிகாட்டிகளாகவே இருப்பர். அவர்களே நாம் பின்பற்றத் தக்கவர்கள்.

மாந்தன் தன்னம்பிக்கையும் தன்னுரிமையும் கொண்டு முன்னேறியே வந்திருக்கின்றான். அடர்ந்த காடுகளின் புதர்களிலும், மலை முழைஞ்சுகளிலும் ஆடையின்றித் திரிந்தவன், பருத்தியும் பட்டும் கொண்டு உயர்ந்த நாகரீக உடைகளை உடுக்கக் கற்றுக் கொண்டதும், ஒரு கட்டையையே தெப்பமாகக் கொண்டு நீரில் மிதந்தவன் பன்னூறு கற்களுக்கப்பால் எய்கின்ற வெடிகுழல்களைத் தாங்கிச் செல்லும் பெரிய பெரிய கப்பல்களைச் செய்யக் கற்றுக் கொண்டதும், தன் பசியைத் தணிக்க ஒரு பாம்பையோ, எலியையோ கொன்றவன் பல்வகையான உணவு முறைகளைச் சுவையாகவும் ஒழுங்காகவும் சமைத்து உண்ணக் கற்றுக் கொண்டதும், பெரிய பெரிய ஆமை ஓடுகளால் மார்பை மறைத்துக்கொண்டு போரிட்டவன், இரும்பும் வெண்கலமும் கொண்டு போர் அணிகளைச் செய்யக் கற்றுக் கொண்டதும், ஒழுங்கின்றிச் செவிப் பறை கிழியுமாறு தப்பறைகளைக் கொட்டி முழங்கியவன், இனிமையுடனும் இசை யெழும்புமாறும் நரம்பு, துளம்பு, தோல், துளைக்கருவிகளைப் பயன்படுத்தக் கற்றதும், களிமண் திட்டுகளில் கோணல் மாணலாகக் கிறுக்கி ஓவியங்களை வரைய முற்பட்டவன் அழகும் அருமையும் பொதுள ஓவியமும் படிமமும் செய்ய அறிந்து கொண்டதும், தான் கொன்ற விலங்குத் தோலிலும் மரப்பட்டைகளிலும் இலைகளிலும் கருத்துக்களைப் பொத்தகங்களாக எழுதியவன், அழகும் செப்பமும் அடக்கமும் சான்ற உயர்ந்த நூற்களைப் பொறிகளைக் கொண்டு அச்சுப் போடத் தெரிந்து கொண்டதும், அவன் பன்னூருயிரம் கட்டு திட்டங்களினின்றும் தன்னை விடுவித்துக் கொண்டு தன்னுணர்வோடும் தன்னுரிமையோடும் வாழ முற்பட்டமையாலேதான் என்பதை நன்கு எண்ணிப் பாருங்கள்.

இக்காலத்தில் கிடைத்து வருகின்ற இத்தனை முன்னேற்றக் கருவிகளையும் ஒரு புறத்தே வீசியெறிந்துவிட்டுப் பழங்காலத்தே

பயன் படுத்திய தெப்பத்தையும், ஆமை ஓட்டையும், தப்பறையையும் மீண்டும் நீங்கள் வைத்துக் கொள்ளத்தான் வேண்டுமென்று ஓர் அரசனோ, ஒரு சமயத் தலைவனோ கூறுவானானால் அவனைப் பற்றி நீங்கள் என்ன நினைப்பீர்கள்? அவன் உங்கள் தன்னம்பிக்கையையும், அதனின்று தோன்றும் தன்னுரிமையையும், அதனின்றெழும் அறிவு விடுதலையையும், அதனின்று முகிழ்க்கும் வினையாற்றலையும் அடக்கியொடுக்குகின்றான் என்று நினைப்பீர்களா? இல்லையா? அதுபோலவே இன்று உங்கள் எண்ணங்கட்கும், அறிவுக்கும் தடை போடுகின்ற அரசும் சமயமும் நாளை மலரவிருக்கும் உலக மலர்ச்சியைத் தடுக்கின்றன என்பதையே நீங்கள் அறிதல் வேண்டும்.

நான் உங்களைக் கேட்பதெல்லாம் ஒன்றுதான். மாந்தன் எப்படித் தன்னுணர்வையும் தன்னுரிமையையும் பயன்படுத்தித் தப்பறையினின்று இசைக் கருவியை அமைத்துக் கொண்டானோ அப்படியே அவன் மெய்யுணர்விலும் ஒரு முன்னேற்றத்தைக் காண வேண்டும் என்பதே. எப்படித் தெப்பத்திலிருந்து கப்பலை அவன் செய்யக் கற்றுக் கொண்டானோ அப்படியே அவன் அரசியலையும் செப்பமாக அமைத்துக் கொள்ள உரிமை பெற வேண்டும் என்பதே; நான் விரும்புவதெல்லாம் இவைதாம்.

நம்முடைய உயிர், உள்ளம், அறிவு, உடல் இவற்றால் அமைந்த வாழ்க்கை எல்லாம் உரிமைபெற்று விளங்க வேண்டும். அப்பொழுதான் உயிர்க்கு விளக்கமும், உள்ளத்திற்கு ஒளியும், அறிவிற்கு உணர்வும், உடலுக்குத் தென்பும், வாழ்க்கைக்கு விடிவும் ஏற்படும் என்பதையே நான் கூற விரும்புகின்றேன். நாம் எண்ணவேண்டும்; எண்ணுதற்கு உரிமை வேண்டும்; புதிய புதிய வினையாற்றல்களில் ஈடுபடல்வேண்டும்!

நாம் எம்பொழுதும் பிறரைப் பின்பற்றிக் கொண்டிருக்க வேண்டியதில்லை. வெறும் அரசாணை சமயக் கட்டுப்பாடுகட்குத் தலைவணங்கும் கோழைகளாக விருத்தல் கூடாது.

உண்மையாகவே எல்லாம் வல்ல ஓரிறைவன் நாம் வணங்கும் வணக்கங்களை ஏற்றுக் கொள்வாரானால், அவர் கோழைகளின் வணக்கங்களையும், ஏமாற்றுக்காரர்கள் தம் தொழுகை

களையும் கண்ணெடுத்தும் பாரார். உங்கள் உரிமையை மறுக்க எவர்க்கும் உரிமை கிடையாது. ஓரிருவரின் அல்லது ஒரு குழுவின் ஆட்சியால் நீங்கள் கட்டுப்பட்டுக் கிடப்பீர்களாயின், முதலில் உங்கள் எண்ணங்கட்கும் வினைகட்கும் ஆன உரிமையைத் தட்டிக் கேளுங்கள். உங்களுக்கு என்னென்ன உரிமைகள் வேண்டும் என்று விரும்புகின்றீர்களோ, அந்தந்த உரிமைகளைப் பிறர்க்கும் அளியுங்கள். இயற்கையின் பண்புகள் முற்றும் உள்ளே புகுமாறு உங்களின் மனக்கதவுகளைப் பரக்கத் திறந்து வையுங்கள். புத்தம் புதிய எண்ணங்களை வரவேற்று வாழ்த்துங்கள்; அப்பொழுதுதான் உண்மை வாழ்க்கை மலர்ந்து உண்மை முன்னேற்றம் புலப்படும்.

ஒரு சமயத்திற்குக் கட்டுப்பட்டவன் தன் மனக்கப்பலை, பழைமைத் துறை முகத்தில் கட்டிவிட்டுக் கவலையற்றுத் திரிகின்ருன். உரிமையென்னும் மறுதுறை கட்டுப்பட்டுக் கிடக்கும் கப்பலுக்குப் புலப்படுவதில்லை. சமய உண்மைகளும் கட்டுப்பட்ட உள்ளத்தில் சுடர்விடுவதில்லை.

என் மட்டில், அறிவென்னும் விரிந்த கடலில் நீந்தவே விரும்புகின்றேன். காற்று, அலை, வானம் உடுக்கள், இவற்ருேடு என்னையும் ஒருவனுகக் கருதவே விரும்புகின்றேன். புயற்காற்ருல் தூக்கப்பட்டு எங்கோ திக்குத் திசை தெரியாமல் பெருமையோடும் புகழோடும் அடித்துச் செல்லப்படுவதில் மன நிறைவுறுவேனே யன்றிப் பழைமைத் துறையில் கட்டுண்டு சீரழிந்து கிடக்க நான் ஒரு பொழுதும் விரும்பேன்.

— தொடரும்.

தமிழ் மொழியின் சொல்வளம்.

கருவி வகை.

கருவி:	பருப்பொருள் ஆய்தப் பொது (Instrument)
ஆயுதம்:	ஒரு தொழிற்குரிய கருவி (Tool)
படை:	போர்க் கருவி. (Weapon)
கரணம்:	அறிவுக் கருவி அல்லது உறுப்புக் கருவி.
காரணம்:	காரியத்தை விளைவிப்பது. (Cause)
ஏது:	'வாத'க் காரணம். (Reason)
தலைக்கீடு:	போலி ஏது. (Pretext)

— ஞா. தே.

தன்னை மறந்த தமிழனுக்குத் தாலாட்டு!

ம. இலெ. தங்கப்பா.

ஆராரோ ஆரரிரோ ஆராரோ ஆரிரரோ
வாராய் தமிழ்மகனே வாழ்த்துனக்குப் பாடுகின்றேன்!
ஊர்ப்பேர் மறந்தே உரன்மறந்து பேர்மறந்து
சீர்ப்பைந் தமிழ்மறந்து சீரிழந்தாய் கண்ணுறங்கு!
வஞ்சரிடு மெத்தை! வடக்கன் அளித்ததுவாம்
பஞ்சுத் தலையணைகள்! பாங்குடனே கண்ணுறங்கு!
ஆக்கியபொய் இந்தியத்தில் அன்னைத் தமிழ்பிணைத்த
தூக்குக் கயிறுன்றன் தொட்டிலுக்கு நற்கயிறும்!
ஓர்நா டெனுமருட்கே உன்னை விலைபேசிச்
சீர்கெடுத்தார் கண்ணுறங்கு! செத்ததுபோல் கண்ணுறங்கு!
முன்னைச் சிறப்பெங்கே? மொய்ம்பெங்கே? ஆற்றலெங்கே?
தன்னை அடகுவைத்துத் தாழ்பவனே கண்ணுறங்கு!
கண்ணுறங்கு கண்ணுறங்கு கண்டவனெல் லாந்தலைமேல்
கொண்டமட்டும் மண்வாரிக் கொட்டுமட்டுங் கண்ணுறங்கு!
ஆந்திரத்தான் மண்பறித்தான்; ஆங்கந்தக் கன்னடத்தான்
பாய்ந்துவரும் ஆற்றில் படுத்துப் புனல் மறித்தான்;
கேரளத்தான் உன்றன் கொழுஞ்சோற்றைத் தின்றுட்சிப்
பேரிடமெல் லாம்நுழைந்து பீடுடனே வாழ்கின்றான்.
மார்வாரி உன்றன் மடியவிழ்த்துத் தான்முடிந்தான்.
கூர்சரத்தான் வந்து குடியிருப்பைத் தான்பறித்தான்.
சௌகாருஞ் சேட்டுமிங்குச் சத்திரமென் றெண்ணிவிட்டார்.
துவ்வாத் தமிழ்மகனே! தூங்கப்பா தூங்கிடுவாய்?
ஆரியர்வந் திங்கே அருமைத் தமிழ்கெடுக்க
ஈரத்தால் ஒப்பினையோ? எல்லாம் தொலைத்தாயே!
மானம் அழிந்தாய்; மதிகெட்டாய்! வன்மையற்றாய்
மேனாள் நினைவழிந்தாய்; மெய்மறந்து போனாயே...!
இந்நாட் சிறுவுரிமை வாயால் இரத்தற்கும்
துன்நா நடுங்கித் தொடைநடுங்கி நிற்கின்றாய்!
இடித்த புளிபோல் இருந்தஇடம் பேரா
தொடுக்கமுற்றுப் போனாயே! ஒட்பந் தொலைத்தாயே!
நாட்டைத் துணித்திட்டார் நல்லதெனப் பல்லிளித்தாய்;
வீட்டுப் பொருளெல்லாம் வேண்டினார்! கொண்டளித்தாய்!
உன்நாக ரிகமிக ஊழ்த்ததென்றார் ஆமென்றாய்;
எம்நாக ரீகத்தை ஏலென்றார்; ஏற்றுவிட்டாய்!
உன்றன் வரலாற்றின் உண்மை தனைப்பழித்தார்,
நன்றென் றிளித்தாய்; நடலையனே கண்ணுறங்கு.
தில்லி வடக்கர் தெருளற்றார்; சொல்வதெலாம்
இல்லையெனச் சொல்லாமல் ஏற்றவனே, கண்ணுறங்கு!
இந்தியெனும் பேரிழிவை எட்டியுன்றன் நெற்றியிட்டார்;
முந்தும் வினையறியா மூங்கையனே கண்ணுறங்கு!

ஆட்சித் தமிழை அலைக்கழிக்கத் திட்டமிட்டார்;
மாட்சியெனக் கூறி மடிநீட்டி நிற்கின்றாய்!
கொப்புக்கோல் தூக்கிக் குரங்காட்டம் ஆட்டுகின்றார்;
அப்பா 'அநுமனே' 'அங்கதனே' கண்ணுறங்கு
உன்னைப்போல் நால்வரிங்கே உற்றுத் தலைமைபெற்றால்
பின்னைத் தமிழென்னும் பேருமிஞ்ச மாட்டாதே!
இன்னம் பலர்வருவார்; உன்றன் பொருள்பறிப்பார்;
பொன்னைப் பறிப்பார்; புழங்கும் மனைபறிப்பார்;
சொல்லைப் பறிப்பார்; சுடரும் வழிபறிப்பார்!
பல்லைக் கழற்றிப் படுக்கையிலே வீழ்த்திடுவார்;
யாவருநின் கேளிரன்றோ! யாதும்நின் ஊரன்றோ!
ஆவ தெதிர்மொழியேல் அப்பனே கண்ணுறங்கு;
என்செய்வாய்? கண்ணுறங்கு ஏதுபயன் கண்விழித்தால்?
முன்செய் வினையடடா! மூடியகண் தூங்கிடுவாய்!
இங்குள்ள நின்தலைவர் யாங்கொளிந்தார் சீச்சீச்சீ?
'சங்கம்' முழங்கியஅச் சான்றோர்தாம் எங்கேயோ?
வீட்டுள் ஒளிந்தாரோ? வெட்டிக் குழியொன்றில்
மூட்டமிட்டு வீழ்ந்தாரோ? மொய்ம்பழிந்தாய் கண்ணுறங்கு!
பாட்டெழுதித் தாம்பிழைக்கும் பன்னூறை யன்றோரும்
ஏட்டை இறகை எடுத்தவரைப் பாடலுற்றார்;
பட்டம் பலபெற்ற பாங்கின் தமிழறிஞர்,
எட்டாப் பெரும்புலவர் எண்ணூறு நூல்தீட்டிப்
பொன்னால் புகழால் பொலிவுற்ற வான்புலவர்,
முன்னூறு பேரிந்த மூதகத்தில் வாழ்ந்திருந்தும்
அன்னவரெல் லாந்தமிழுக் கெள்முனையும் ஆகிவரார்;
பொன்னேர் தமிழ்க்கோர் புலவன் இருந்திட்டான்;
மின்னேர் இடிபோல் முழங்குந் தமிழ்ப்புலவன்;
ஒன்னலரைத் தீய்க்கும் உணர்வாளன்; வாள்மறவன்;
ஒற்றைத் தமிழனவன் உண்டென்று நீயுவந்தாய்!
அற்றைப் புலவனுமே அந்தோ நிலையிழந்தான்!
செந்தமிழைப் பாடியவாய் சீரழிந்து காசுக்கே
இந்தியத்தைப் பாடுதடா! என்மகனே கண்ணுறங்கு!
பைந்தமிழைப் பாடியவாய் பாரதத்தைப் படுதடா!
இந்தக் கொடுமையினி எங்குரைப்பாய் கண்ணுறங்கு!
வெற்றுத் தமிழ்மகனே! வீணனே! நின்னுட்டைப்
புற்றரவஞ் சுற்றுதடா! போக்கிலியே கண்ணுறங்கு!
முத்தமிழும் போகி, வரலாறும் மூழ்கிப்போய்ச்
செத்தொழிந்து போகுமட்டுஞ் சீறியெழாய் கண்ணுறங்கு!
ஆராரோ ஆரரிரோ, ஆரரிரோ ஆராரோ
தேராய், விழியாய், தெருளாயே! கண்ணுறங்கு!

எறும்புகள்.

— * —

எறும்பு இனத்தில் ஏறத்தாழ 3500 வகைகள் உள்ளன. உலகில் சூடுள்ள எல்லா நாடுகளிலும் அவை இருக்கின்றன.

எறும்புகளுக்குக் கண்கள் இல்லை. ஆனால் ஒலி கேட்கும் ஆற்றலும் நுகரும் ஆற்றலும் உண்டு. அதன் உடல் இரு பாகங்களாகப் பிளந்துள்ளது. தலைக்கு அண்மையில் உள்ளது நடுப்பகுதி. மற்றொன்று அதன் வயிற்றுப் பகுதி. புறத்திற்கு மூன்று ஆக ஆறு கால்கள் எறும்புக்கு உண்டு. அவை யாவும் உடலின் நடுப்பகுதியுடன் சேர்க்கப்பட்டுள்ளன. தலையில் 'உணர்துதி' என்ற ஓர் உறுப்பு இருக்கிறது. அது எப்பொழுதும் அசைவது போலிருக்கும். அதைக் கொண்டுதான் எப்பாகத்தையும் தொட்டுக் கொள்ளும். இரண்டு எறும்புகள் எதிர்ப்பட்டால் அவ்வுறுப்பின் மூலம் கருத்தை வெளியிட்டுக் கொள்ளும் சில வகை எறும்புகளுக்குச் சிறகுகள் உண்டு. அவை புற்றீசல் எனப்படும். எறும்புக்கு அச்சம் மிகுதி.

எறும்புக்கு விருப்பமான உணவு தேன். எனினும் சில புல் மணிகளையும் உணவாகக் கொள்கின்றன. சில வகை எறும்புகள் மரத்துகள்களை உண்ணும். அமெரிக்கக் கண்டத்தில் வாழ்பவை சில இலைகளை உண்கின்றன. இனிப்பான பொருள்கள் எங்கிருந்தாலும் மோப்பம் பிடிக்கும் ஆற்றல் எறும்புக்குண்டு.

எறும்புகள், ஈரமும், இருளும் உள்ள இடங்களில் வீடமைக்கின்றன. அதனால் நிலத்தின் அடிப்பாகம் அவற்றிற்கு ஏற்றதாயிருக்கின்றது. சிலவகை எறும்புகள் மரங்கள் மேலும், சில நிலத்தின் மேலும், வேறு சில கற்களின் கீழும் கூடுகள் கட்டுகின்றன. நிலத்தின்மேல் கட்டப்படும் கூட்டுக்கு ''எறும்புக் குன்று'' என்று பெயர். அமெரிக்கக் கண்டத்தில் வாழும் ஓர் எறும்புவகை இலைகளைக் கொண்டே வீடு அமைக்கும். வெள்ளை எறும்புகள் அமைக்கும் கூடுகள் பெரியவை. சில வகை எறும்புகள் மரத்துண்டுகளிலிருந்து தாள் போன்ற ஒரு பொருளை உண்டாக்கும். அதை வாயிலூறும் ஒரு வகைப் பசையோடு

கலந்து புதுமையான கூடுகள் அமைக்கின்றன. அக்கூடுகள் பெரியவை. அவை காற் பந்து அளவு இருக்கும். ஒரு வகை "வெள்ளை எறும்புகள்" அமைக்கும் வீட்டிற்குக் கூரை இராது. மண் துகள்களோடு வாயிலுள்ள பிசுபிசுப்பைக் கலந்து சுவரை உயரமாகக் கட்டும். பிறகு சுவர்கள் உலர்ந்து உறுதிப் படும். இந்த வலுவான வீடுகள் இருபதடி உயரமுமிருக்கும். இவ்வீடுகள் நிலத்திற்கடியில் உள. இவ்வகை எறும்புகள் ஆத்திரேலியாக் கண்டத்தின் வட பாகத்தில் இருக்கின்றன.

ஒரு வகைக் காந்த எறும்புகள் வடக்கு நோக்கி அல்லது தெற்கு நோக்கி வீடுகளை உயரமாகக் கட்டும். அக்கூடுகள் நிறைந்த இடம் பார்ப்பதற்கு நகரம் போலிருக்கும். வேட்டை எறும்புகள் என்றொரு வகை இரை தேடும் பொருட்டு நாடோடி களாகத் திரிவதால் அவை நீண்ட காலத்திற்குப் பயன்படும் வீடுகள் அமைப்பதில்லை.

எறும்புகள் முட்டையிட்டுக் குஞ்சு பொறிக்கின்றன. முட்டை வெண்மையாகவும் சிறியனவாகவும் இருக்கும். ஏதா வது உணவுப் பொருளின் மேல்தான் அவை முட்டையிடும். அவ்வுணவு முட்டையிலிருக்கும் புழுவுக்கு உணவாகும். சில வகை எறும்புகள் தண்ணீரில் முட்டை வைக்கும். முட்டையி லிருந்து குஞ்சு வெளிப்படுவதற்கு முன்பே தாய் இறந்து விடும்.

எறும்பு இனத்தில் சிற்றெறும்பு, கட்டெறும்பு, செவ்வெறும்பு வெள்ளெறும்பு, பேரெறும்பு, போர் எறும்பு, வேட்டை எறும்பு, உழவு எறும்பு, கொள்ளை எறும்பு, உழைக்கும் எறும்பு, சிற கெறும்பு, பெருந்தலை எறும்பு எனப் பல் வகையுண்டு. ஆத்தி ரேலியாவில் "பச்சை எறும்பு" என்று ஒருவகையும் உண்டு.

ஒவ்வொரு வீட்டிற்கும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட அரசி எறும்புகள் இருக்கும். அவை பல்லாண்டுகள் வாழும். பல ஆண்களை மணந்து குஞ்சு பொறிக்கும்.

எறும்புக் குமூக வாழ்வில் ஒவ்வோர் எறும்புக்கும் ஒவ் வொரு வேலை உண்டு.

முட்டையிலிருந்து வெளிவரும் உருவத்திற்குக் கால்கள் இரா. எனவே அதற்கு உணவு தந்து பேணும் பொறுப்பு ''காக்கும் எறும்புக்கு'' உண்டு. அவ்வெறும்பு, குழந்தைகளை இரவு நேரத்தில் சூடாக இருக்கும் கூட்டின் அடிப்பகுதிக்கும், பகல் நேரத்தில் கதிரவன் வெப்பம் வீசும் வெளிப்பகுதிக்கும் கொண்டு செல்லும்.

உழைக்கும் எறும்பு ஆணும் அன்று; பெண்ணும் அன்று, அதற்குச் சிறகுகள் இல்லை; அது பகல் முழுதும் வீட்டிற் குள் வேலை செய்து கொண்டேயிருக்கும். அதற்கு உணவு தேடிவர, வேட்டை எறும்புகள் படை படையாக இரவு நேரங் களில் புறப்படும். அப்பொழுது காவல் எறும்புகள் வாயிலில் வந்து காத்து நிற்கும். பகைவர் வந்தால் துரத்தும். சிலபொழுது கொன்று விடுவதுமுண்டு.

ஆண் பெண் எறும்புகளுக்கு இறகு உண்டு. அவை ஒரு நாள் பறந்து போய்விடும்.

எறும்புகளுக்குத் திருமண வாழ்வு உண்டு. ஒரு பெண் எறும்பு தன் கூட்டிலுள்ள ஆண் எறும்பையோ அல்லது வேறு கூட்டிலுள்ள ஆண் எறும்பையோ மணந்து கொள்ளும். திருமணத்திற்குப்பின் பெண்ணின் இறகுகள் விழுந்துவிடும். அவை வெளியே போவதில்லை. திருமணமான ஆண் எறும்பு வெளியே போனால் காவல் எறும்புகள் அவற்றை மீண்டும் கூட்டில் விடா. எனவே கூட்டினின்றும் வெளியேறாமல் அவை உணவின்றி இறக்கும். சில வகை எறும்புகள் மந்தை வைத் துள்ளன. பயிர் செய்கின்றன. புற்றைச் சுற்றி இடங்களைத் துப்புரவு செய்தபின், கூல மணிகளைத் தேடி எறும்புகள் புறப் படும். வயல் கண்ட இடத்தில் நின்று வேலை துவக்கும். ஓர் எறும்பு பயிரின்மேல் ஏறிக் கூலமணிகளை அசைத்துப் பிடுங்கும். சில அவற்றை வாயில் கௌவிக் கீழே போடும். கீழே காத்து நிற்கும் வேறுசில மணிகளைப் பொறுக்கிச் சென்று புற்றில் சேர்க்கும். இடம் தொலைவாக இருந்தால், பல குழுக்கள் மாறி மாறி எடுத்துச் செல்லும்.

எறும்புகளில் சிலவகை கூலங்களைப் பயிரிடுவதுண்டு. அதற்கு ''எறும்பு நெல்'' என்று பெயர். மழைக்கு முன்னால்

புற்றைச் சுற்றி சதுப்பு நிலங்களில் விதைகளைத் தெளிக்கும். களை பிடுங்கிப் பயிரை வளர்க்கும். குறித்த நாளில் அறுவடை செய்யும். காய்ந்த புற்களை அப்புறப்படுத்திவிட்டு நிலத்தை அடுத்த விதைச்சலுக்கு ஏற்றதாக்கும். எறும்புகள் நெல்லை உமி போக்கி அரிசியாக்கி நிலத்திற்குள் நாலடி ஆழத்திலிருக்கும் குதிர்களில் பாதுகாக்கும். அரிசியுடன், கறையான், புழு பூச்சிகளையும் வற்றலாக்கி உணவுக்குச் சேர்த்து வைக்கும். சிலஎறும்புகள் தேனைச் சேர்க்கும். ஒருவகைப் பச்சை ஈக்கள் செடிகளில் உட்கார்ந்து தேன் குடிக்கும் பொழுது அவற்றின் உடலில் தேன் துளிகள் ஒட்டும். அத்துளிகளை எறும்பு கவர்ந்து விடும். இவ்வகை எறும்புகள் பச்சை ஈக்களைப் பிடித்துபோய் கூடுகளிலும் வளர்க்கின்றன.

வேறொரு வகை எறும்பு மூன்றடி ஆழத்தில் நிலவறை அமைக்கும். அப்புற்றுச் சுவர்களில் தேன் ஒட்டிக் கொண்டிருக்கும். ஒவ்வோர் அறையிலும் தேன் சேர்க்க ஓர் எறும்பு உட்கார்ந்திருக்கும். அது என்றும் வெளிவருவதில்லை.

எறும்புகளிலும் கொடியன உண்டு. செந்நிற எறும்புகள் பழுப்புநிற எறும்புகளின் கூட்டைத் தாக்கும். பழுப்பு எறும்புகள் கூட்டிற்கு வெளியே வந்து எதிர்த்துத் தோல்வியுற்றுப் பின் பதுங்கிவிடும். அப்பொழுது செந்நிற எறும்பு பழுப்பு எறும்பின் குஞ்சுகளைக் கவர்ந்து சென்று அடிமையாக வைத்துக்கொள்ளும்.

அமெரிக்கக் கண்டத்துள்ள ஒரு வகை எறும்புகள் படை படையாக அணிவகுத்துச் செல்லும். அவை சோம்பேறி. அடிமைகளைக் கொண்டே உயிர் வாழும். பூச்சிகளைக் கிழித்து உண்ணும். அவற்றின் சிற்றரசி அடிமைகளின் கூட்டில் நுழைந்து அடிமை அரசியைக்கொன்று, தானே அரசியாகிவிடும். போர் செய்யும் எறும்புகளுக்குப் பெரிய தலை, பெரிய தாடை, நீளமான மூக்கு இருக்கும். மூக்கின்வழி ஒருவித நீரைப் பகைவர் மேற் செலுத்தும். எறும்புகள் மரத்துண்டுகளை வாயில் கௌவிச் சென்று பாலம் அமைத்து ஆற்றைக் கடக்கும். இறந்த எறும்புகளை அவை தூக்கிச்சென்று மணலில் குழிபறித்து மூடிப் புதைக்கும் பழக்க முடையன.

———

சார்லசு டார்வின்.

(CHARLES DARWIN)

(1809 - 1882)

பொருள், புகழ், வாழ்க்கை முதலிய எவ்வகைக் குறிக்கோளும் இன்றித் தம் பிறப்பின் உட்கருத்தைக்கண்டறிந்து, அதன் வெற்றியே வாழ்வின் முழு நோக்கமாகக் கொண்டு வாழ்ந்து சென்ற பெருமக்களின் வரலாறுகளே இவ்வுலகத்தின் எல்லை வரை நின்று புகழ் பெறுவன. அத்தகையோர் காலத்தைப் பற்றியும், உலகக் கொள்கைகளைப் பற்றியும், மக்கள் விருப்பு வெறுப்புகளைப் பற்றியும் ஒரு சிறிதும் கவலைப் படுவதில்லை. அவ்வாறு கவலையுற்றவர் தம் தனிம ஆற்றலை வெளிக் கொணர்ந்ததுமில்லை. இவ்வுண்மைக்குச் சான்றாக நிற்கும் பெரியோர் ஒரு சிலரின் வாழ்க்கை வரலாறுகளில் **சார்லசு டார்வின்** என்ற உயிர் நூலாசிரியரின் வரலாறும் ஒன்றாகும்.

இவ்வுலகில் ஆதாம் ஏவாள் கதை உள்ளவரை, சார்லசு டார்வின் அவர்தம் வரலாறும் நின்று நிலை பெறும். கிறித்துவுக்குப்பின் ஆயிரத் தெண்ணூறு ஆண்டுகளாகவும் அதன் முன்பும் நின்று நிலைத்து வலுப்பெற்றிருந்த உயிர்த் தோற்றக் கற்பனைக் கொள்கையை, எவரும் எண்ணியும் பாராது, சமய வெறியே காழ்ப்புற்றிருந்த அக்காலத்தில், **'நிரையத்தில் வாழும் பேய்களின் தலைவன்'** என்று எள்ளி நகையாடப் பெற்ற ஒருவர் – தனி ஒருவர் – துணிவுடன் எதிர்த்துக் கூறினார் எனின் அவர் தன் வாழ்வைப்பற்றி வைத்த நம்பிக்கையைவிட அறிவின் மேலும் உழைப்பின் மேலும் வைத்த நம்பிக்கை எத்துணை வலிந்தது என்பதைக் கூறவும் வேண்டுமோ?

தம் கழியிளமைப் பருவத்திலிருந்தே நூற் கல்வியிலும் சமயக் கல்வியிலும் நாட்டஞ் செலுத்தாது இயற்கையையே

கூர்ந்து நோக்கி நேரடியாகக் கற்ற அப் பெருமகனுர், தம் வாணுளில் எதிர்ப்பட்ட ஏச்சுக்கும் பேச்சுக்கும் அஞ்சாது தாம் கண்ட உண்மைகளைத் துணிவாகவும் தெளிவாகவும், நில நூல், மாந்த நூல், உயிர் நூல், இயற்கை நூல் முதலியவற்றில் தேர்ந்த பேராசிரியன்மார் ஒப்புமாறும், வியக்குமாறும் எடுத்துக் கூறினரென்னின் அவர் வரலாறு, வெறும் சோற்றுப் போராட்டமே வாழ்க்கைப் போராட்டமாகக் கொண்டு விளங்கும் இக்கால மக்களின் மேம் போக்கான புன்மை யொழுகிற்கு எத்துணை இன்றியமையாத தொன்ரும்.

இங்கிலாந்தில், சுருசு பரி (Shrews Bury) என்னும் நகரில் 1809-ஆம் ஆண்டில், பிப்ரவரி திங்கள் 12 ஆம் நாள் சார்லசு டார்வின் பிறந்தார். இவரின் தந்தை இராபர்ட் டார்வின் ஒரு மருத்துவர். டார்வின் எட்டு ஆண்டுகளைக் கடந்த பொழுது இவரின் தாய் உயிர் துறந்தாள்.

பள்ளிப் படிப்பில் நாட்டமற்றிருந்த இவர் காடு மேடுகளில் அலைந்து திரிவதும், அங்குள்ள பூச்சி புழுக்களைப் பிடித்து அவற்றின் வண்ணங்களிலும், உடல் அமைப்புகளிலும், வாழ்க்கைப் போராட்டங்களிலும் தம் கருத்தைச் செலுத்துவது மாக விருந்தார். முட்டையினின்று குஞ்சுகள் வெளிவருவதையும், அவற்றிற்கு இறக்கைகள் முளைப்பதையும் கண்டு வியந்து அம் மாறுதல்களை மிகவும் கூர்மையாக நோக்கிவந்தார் டார்வின். இயற்கையின் நேர் முறைக் கல்வியில் ஏற்படுகின்ற ஐயப்பாடுகளை விளக்குகின்ற இயற்கை நூல்களைத் தேடிப் படித்தார்.

தம் மகன் கல்வியிலோ தன் குடும்பத் தொழிலிலோ நாட்டங் கொள்ளாது விதை, பூ, காய், கனி, இலை, பட்டை முதலிய நிலத்திணைப் பொருள்களிலும் புழு, பூச்சி, வண்டு, பறவை, நண்டு, மீன், கிளிஞ்சல், நத்தை, பாம்பு, பல்லி முதலிய சிற்றுயிர் இனங்களிலும் 'அவற்றின் எலும்பு, இறகுகளிலும் பொழுதைக் கழிப்பது, தந்தைக்குப் பெரு வருத்தத்தைத் தந்தது. ஆதலின் 1825-ஆம் ஆண்டு மருத்துவ நூற்பயிற்சிக்காக எடின்பரோ பல்கலைக் கழகத்திற்கு அனுப்பி வைத்தார். டார்வினுக்கு அக்கால மருத்துவ முறையில் பெரிதும் வெறுப்பு

ஏற்பட்டிருந்தமையால் மீண்டும் 1828–ஆம் ஆண்டில் சமய நூற்பயிற்சிக்காக கேம்பிரிட்சு பல்கலைக் கழகத்திற்கு அனுப்பினார். இதற்கிடையில் டார்வின் கிரேக்க இலத்தீன் மொழிகளை நன்கு கற்று அம்மொழிகளிற் பொதிந்து கிடந்த உயிர் நூற் கொள்கைகளை நன்குணர்ந்தார். 1831-ஆம் ஆண்டு பட்டமும் பெற்றார்.கேம்பிரிட்சு பல்கலைக் கழகத்தில் நிலைத் திணையியல் பேராசிரியர் **என்சலோ** என்பார்தம் பொருந்திய நட்பால் டார்வின் மேலும் ஊக்கமுற்றுத் தம் நுண்ணுயிர் ஆய்வுகளில் முன்னினும் ஈடுபட்டார். இவர்க்கு விடிவு போன்று உலகச் சுற்றுக் குழு வொன்று **பீகிள்** (Beagle) என்ற ஓர் ஆராய்ச்சிக் கப்பலில் தென் அமெரிக்கக் கடற்கரை நாடுகட்கும் பிற திட்டு கட்கும் சென்று கால, நில, உயிர் நிலை, முதலியனபற்றி ஆராயத் திட்டமிட்டது. அச் செலவில் டார்வினை ஈடுபடுமாறு என்சலோ வற்புறுத்தினார். இவரும் அதற்கிசைந்து அக் குழுவுடன் சென்றார்.

1831-ஆம் ஆண்டு புறப்பட்ட அக்கப்பல், தென் அமெரிக் கக் கடற்கரைப் பகுதிகள், ஆத்திரேலியா, நியூசிலாந்து, டாசுமானியா, மால்டிக் திட்டுகள், செயின்ட் எலினா, கேப்வெர்ட் திட்டுகள் முதலியவிடங்கட் கெல்லாம் சென்று அங்குள்ள நிலம் காலம், உயிர் வாழ்க்கை முதலியவற்றை, விரிவாக ஆராய்ந்து 1836-இல் ஊர் திரும்பியது. அக்கப்பல் செலவு டார்வினுக்கு மிக்க பயன்பட்டது. அதுபற்றிப் பல நூல்களையும் சொற்பொழிவு களையும் செய்திருக்கின்றார். செலவின் பொழுது தாம் அரிதாகத் திரட்டிய பல நாட்டுப் பறவை யிறகுகள், விலங்குகளின் எலும்புக் கற்கள், நிலத்திணைப் பொருள்களின் வேறுபட்ட தோற்றங்கள் முதலிய ஆயிரக் கணக்கான பொருள்கள் இவர் ஆராய்ச்சிக்குப் பெரிதும் பயன்பட்டன. “இந்தக் கப்பல் செலவு எனக்கு நேர்ந்திருக்காமல் போயிருப்பின், நானும் ஆதாம் ஏவாளின் கதையைத்தான் பொன்னேடுகளில் பொறித்து வைத்துப் பாராட்டிக் கொண்டிருப்பேன்” என்று அவர் பின்னர் ஒரு கால் குறிப்பிட்டுள்ளார்.

1839-ஆம் ஆண்டு தம் மாமன் மகளாகிய **எம்மா வெட்சுவுட்** என்னும் அழகும் இளமையும் பண்பும் வாய்ந்த

பெண்ணை விரும்பி மணந்து கொண்டார். திருமணத்திற்குப் பின்னர் இலண்டன் நகர வாழ்க்கையைத் துறந்து டோவன் (Down) என்ற சிற்றூர்க்குக் குடியேறினர். தம் இறப்பு வரை அச் சிற்றூரைவிட்டு நகரவேயில்லை. அங்குதான் தம் ஆராய்ச்சிகளை விரிவாக நடத்தினர். சிற்றுயிர்களின் தோற்ற நடைமுறைகட்கும் பேருயிர்களின் தோற்ற நடைமுறைகட்கும் ஒரு தொடர் இருப்பதைப் பலவாறு ஆராய்ந்து கண்டார். அவற்றின் எலும்பு அமைப்புகள் ஒரே படியாகவிருப்பதை யறிந்து வியந்து பல உண்மைகளை யறிந்தார்.

இவற்றையெல்லாம் நிரலாகப் பாகுபடுத்தி, 1842- ஆம் ஆண்டில் **இயற்கையின் தேர்வுநிலைக் கொள்கை** என்னும் சிறு நூல் ஒன்றை வெளியிட்டார். இதில் ஒருவாறு உயிர்களின் போராட்டங்களையும் அவற்றின் நிலைத்த வாழ்க்கைகளையும் விளக்கியுள்ளார். பின்னர் தம் நெருங்கிய நண்பர்களான இலயல் (Lyell), ஊக்கர் (Hooker) என்பாரின் வற்புறுத்தலால் 1859-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 24-ஆம் நாள் தம் பேராராய்ச்சிப் பெரும்பயனாக **இயற்கைத் தேர்வின் வழி உயிரினங்களின் மூலம்'** (The Origin of species by means of Natural selection) என்னும் அரிய நூலை வெளியிட்டார். இதில் உயிரினங்களின் கூர்தலறக் கொள்கை (The Theory of evolution) பெரிதும் விளக்கப் பெறுகின்றது. இந் நூல் தான் கூர்தலறக் கொள்கைபற்றி முதன் முதல் பேசப் புகுந்ததாயினும் இதன் உண்மையைப் பொதுமக்களிலும் அறிஞர்களிலும் சிலர் ஏற்றுக் கொள்ள மறுத்தனர். "உலகிலுள்ள பொருள்களை இப்பொழுதிருப்பதைப் போல முழுவடிவமாகவே இறைவன் படைப்புக் காலத்தில் தோற்றுவித்தார்" என்னும் கொள்கையே அதுவரை நிலவியிருந்தது. இதைத் தவிர வேறு வகையாக எவரும் நினைக்கிலர்; நினைப்பினும் கூறிலர்; கூறினும் ஒப்புவார் எவரும் அன்றிலர். இந்நிலையை அடியோடு மாற்றினர் சார்லசு டார்வின்.

இவர்க்கு ஏற்பட்ட எதிர்ப்புகள் பலவாகும். சமயப் பேராசிரியரெல்லாம் இறையிலி என்று இவரை இழித்துக் கூறினர். மக்கள் பலர்க்கு இவர் கொள்கை துளியும் விளங்கவில்லை.

இவர் வாழும் ஊரை நிரையத்தின் தலைமைப் பேய் வாழும் ஊர் என்று முரசு கொட்டினர். கடவுட் கொள்கைக்காரர்கள் எல்லாம் இவரைக் கடுமையாகத் தாக்கிப் பேசினர்; தூற்றினர்.

'இயற்கைத் தேர்வு நூலை' ப்பற்றி சொற்போர் நிகழ்ந்தது. அதில் சமயவாசிரியர் பலரும், டார்வின் கொள்கையர் சிலரும் முன்னின்று தத்தம் கொள்கைகளை எடுத்து விளக்கிப் பேசினர். இறுதியில் சமயவாசிரியர் தோற்றனர். ஆனால் இவற்றுள் எதைப்பற்றியும் கவலை கொள்ளாது எத்தகைய சொற்போரிலும் ஈடுபடாது தம் ஆராய்ச்சிகளிலேயே மேன்மேலும் ஈடுபட்டுக் கொண்டே இருந்தார் டார்வின். இன்று அவர் கொள்கை மிகவும் ஒப்பக் கூடியதாகப் போயிற்று. இறுதி வரை மிகவும் அமைதியுடன் பல ஆராய்ச்சி நூல்களை எழுதினார். கற்றாழை இனப் பூண்டுகளின் கரு முறை (Fertilization of Orchids), தாவிப் படர் கொடிகளின் அசைவுகளும் தன்மைகளும் (The Movements and Habits of climbing Plants), பாவியல் இனத் தேர்வும் மாந்தத் தோற்றமும் (The Descent of Man, and Selection in Relation to Sex), மாந்த இன, விலங்கின வெளிப்பாட்டுணர்வுகள் (The Expression of the Emotions in Men and Animals), நிலத்திணை வகைகளில் தன்னின, பிறிதினச் சேர்க்கை விளைவுகள் (The Effects of Cross and Self Fertilisation in the Vegetable Kingdom), ஒரே யின நிலத்திணைப் பூவினும் செடியினும் உள்ள பல்வேறு வடிவங்கள் (The Different Forms of Flowers and Plants of the same Species), செடிகளின் இயக்கத் திறன் (The Power of Movements in plants), புழுக்களின் செயலால் ஏற்படும் பூஞ்சணம் (Formation of Vegitable mould through the action of Worms) – முதலியன அவர் எழுதிய நூல்களில் சிலவாகும்.

செருமானி, பிரான்சு முதலிய ஆய்வுக் கழகங்கள் இவரை உறுப்பினராக விரும்பித் தேர்ந்தெடுத்தன. இத்தாலியிலுள்ள அரசமை மன்றம் (Royal Academy) இவரைப் பெரிதும் பாராட்டி ஒரு பதக்கம் அளித்தது. தாம் நாடாப் பேரும் புகழும் பொருளும் தாமே இவரைத் தேடி வந்தன.

இறுதிக் காலத்தில் மிக அமைதியுடன் வாழ்ந்து வந்தார். ஏறத்தாழ ஆறடி உயரமுள்ள இவர் எப்பொழுதும் ஆழ்ந்த எண்ணங்களிலேயே மூழ்கியிருப்பார். அவர் குழந்தைகளிடம் நன்குகப் பழகுவார். அவர்க்கு ஒரு காது செவிடெனினும் கூரிய புலனுணர்வுத் திறன் இயல்பாகவே மிகுந்திருந்தது. இவர் தம் பேச்சைவிட எழுத்தே மிகவும் தெளிவாகவும் சுவையாகவும் இருந்ததென இவர் நண்பர் என்சுலோ குறிப்பிட்டுள்ளார்.

ஒரு சிறு பொழுதையும் வீணே கழிக்க விரும்பாத இவ்வியற்கை யறிவுப் பேரறிஞர், இறுதிவரை உலகிற்குப் பல அறிவியல் உண்மைகளை எடுத்துக் கூறியும் எழுதியும் வந்தார். தம் வாழ்வின் முழுப் பொழுதையும் உண்மைகளைக் கண்டறிவதிலேயே செலவிட்ட இவ்வடங்கிய கேள்வியர்—உலகுக்கு அறிவொளி காட்டிய சான்றோர்—1882 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 19-ஆம் நாள் இவ்வுலக வாழ்க்கையைத் துறந்தார். இவர் கண்டறிந்த சில கூர்தலற (Evolution) உயிர்த் தோற்ற உண்மைகளில் சிலவற்றைக் கீழே தந்துள்ளோம்.

1. நிலத்தின் அடிப்பகுதிகளில் உள்ள எலும்புருவங்கள் சிறியனவாகவும், மேற்பகுதிகளில் பெருக்கமுற்றனவாகவும் காணப்படுகின்றன. இது உயிர் இனங்களின் வளர்ச்சியைப் படிப்படியாக உணர்த்தும்.

2. உயர்ந்த உயிரினங்களின் கருவளர்ச்சி முறை தாழ்ந்த உயிரினங்களின் முழுவளர்ச்சியை ஒத்துள்ளது

3. மாந்தரினத்தின் கருவளர்ச்சி முறையும், புறவளர்ச்சி முறையும் உயிரினத் தோற்ற வளர்ச்சி ஒழுங்கை ஒட்டியுள்ளன.

கருவளர்ச்சி முறை: முட்டையினின்று புழுவும், அதனின்று வாலுள்ள மீன்வடிவும், பின் முழு மீன்வடிவும் அதன்பின் நாற்கால் வடிவுமாக உயிரினம் வளர்ச்சியுறுகின்றது.

புறவளர்ச்சி முறை: நாற்கால் பிறப்பு—இருத்தல் தவழ்தல், பெயர்தல், நாற்கால்களால் நடத்தல்—பின் இருகால்களால் நின்று முழுமை மாந்த வடிவமாக வளர்தல்.

4. ஒவ்வோரின வளர்ச்சியிலும் தன்னின வளர்ச்சிவரை, தன் கீழின வளர்ச்சி முறைகள் ஒத்திருத்தல், (எ-டு)

முட்டைவடிவம்: எல்லா உயிரணுவுக்கும் பொதுவான வடிவம். நிலைத்திணைகட்கு விதைகளும், பறவைகட்கு முட்டைகளும், பிற உயிர்கட்கு அணுக்களும் முட்டை வடிவமே.

புழு: முட்டையின் அடுத்த வளர்ச்சி நிலை. புழுவினம் தனக்கு இரு பிறப்பு நிலையை ஏற்படுத்திக் கொண்டு அதன் பின் மாறு வளர்ச்சியால் தனித்தது.

வால் போத்தை: முட்டை — புழு — வால் போத்தை.

தனக்கு மூவகைப் பிறப்புகளை ஏற்படுத்திக்கொண்டு வாற் போத்தை (தவளை) இனம் தனித்தது.

மீன் இனம்: முட்டை — புழு — வாற்போத்தை — மீன் என்ற நால்வகைப் பிறப்புகளின் முடிவில் மீனினம் தனித்தது.

நாற் கால்களை உடைய ஆமை, முதலை முதலிய நீர் உயிரிகள்: முட்டை – புழு – வாற் போத்தை – மீன் – முதலை என்ற ஐவகைப் பிறப்பை மேற்கொண்டு மாறு வளர்ச்சியால் ஆமை, முதலையினம் தனித்தது.

விலங்கினம்: முட்டை முதல் தனக்குள்ள அறுவகைப் பிறப்பை மேற்கொண்டு மாறு வளர்ச்சியால் விலங்கினம் தனித்தது.

மாந்த இனம்: முட்டை முதல் தனக்குள்ள எழுவகைப் பிறப்பை மேற்கொண்டு மாறு வளர்ச்சியால் மாந்த இனம் தனித்தது.

ஒவ்வோரினமும் தன் வரையுள்ள வடிவ வளர்ச்சிகளையே கருவளர்ச்சியாக எடுத்துக் கொள்ளும். தன் தன் தேவைக்கும் அறிவு விளக்கத்திற்கும் ஏற்ற உடலின் அக வளர்ச்சி கருவிலும், புற வளர்ச்சி உருவிலும் ஏற்பட்டு முடிவுறும். அக வளர்ச்சி யெல்லாம் முன்னின வளர்ச்சியை ஒத்தும், புறவளர்ச்சி தன்னின வளர்ச்சியில் தனித்தும் இருக்கும். இவ்வுண்மைகளையே

டார்வின் பல பட ஆய்ந்து, எல்லா வகை உயிரினங்களும் முட்டை வடிவிலிருந்தே படிப்படியாகக் கூர்தலற முறைப்படிப் பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளில் வளர்ந்தன என்றும், இறுதியாக விலங்கினத்தினின்றே – அதினும் மாந்தர்க்கு நெருங்கிய குரங்கினத்தினின்றே மக்களினம் மேற்கொண்டு மாறு வளர்ச்சியால் தனித்ததென்றும் ஆராய்ந்து முடிவு கட்டினார். இவர் தம் கொள்கைகள் உடலியல் (Physiology), மக்களினவியல் (Ethnology), குமுகவியல் (Sociology), மனவியல் (Psychology), மக்கள் தோற்றவியல் (Anthropology), நிலவியல் (Geology) முதலிய துறைகளில் வல்ல பேரறிஞர் பலராலும் ஒப்புக் கொள்ளப் பெற்றனவாகும். சார்லசு டார்வினின் கொள்கை இன்றில்லாமற் போமாயின் சமயங்களின் குருட்டு நம்பிக்கைகள் வலுப்பெற்று உலகில் அறிவொளி குன்றியிருக்கும் என்பதில் துளியும் ஐயமில்லை.

இலப்பைகள்.

தமிழ் நாட்டிலுள்ள முசுலீம் மக்களுள் ஒரு வகையினர். இவ்வினத்தவர் இசுலாம் சமயத்தைத் தழுவியவர். இவர் மரக்கலராயர் என்று வழங்கப் பெறும் கடல் வாணிகரினின்று சிறிது வேறுபட்டவர்.

சில நூற்றாண்டுகட்கு முன் ஈராக்கில் ஆளுநர் (Governor) ஆக விருந்த **ஆசி** பென் குசாப் என்பாரால் அங்கிருந்து விரட்டப்பெற்று இந்தியாவின் மேற்குப் பகுதிகளிலும், கன்னியா குமரித் துறையிலும் குடியேறிய அரபியர். இந்தியாவில் பலராலும் துன்புறுத்தப் பெறுகையில் 'இலபெக் இலபெக்' (நாங்கள் உங்கள் அடிமை; நாங்கள் உங்கள் அடிமை) என்று அரபி மொழியில் கூறி வந்தமையால் இவர்கள் **இலப்பைகள்** எனப் பெற்றனர். இவர்கள் சோனகம் என்று கூறப்பெறும் அரபி நாட்டினின்று வந்தமையால் **சோனகர்** என்றும், மரக்கலஞ் செலுத்தலால் **மரக்காயர்** என்றும், காயல் பட்டினத்தில் வாழ்ந்தவராதலின் **காயலார்** என்றும் கூறப் பெறுவர்.

இவர்கள் வெற்றிலை வாணிகம், மீன் பிடித்தல், துணி, பாய் முதலியன நெய்தல், படகோட்டல் முதலிய தொழில்களை மேற்கொண்டனர்.

இவருள் ஆடவர் மகமதியர் போலவும், பெண்டிர் தமிழ் மகளிர் போலவும் நடையுடைத் தோற்றங்களை உடையவராவர்.

(வாழ்க்கையில் எத்தனையோ உண்மையான நகைச் சுவை நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. அவற்றுள் சில வெறுஞ் சிரிப்பை மட்டும் வருவிப்பன. ஒரு சிலவே அறிவைத் தூண்டி எண்ணவும் வைப்பன. அவற்றால், அந் நிகழ்ச்சியில் ஈடுபட்டாரே யன்றிப் பிறரும் பயனடைய வேண்டும். ஆங்காங்கே நடக்கும் இத்தகைய நிகழ்ச்சிகளை மாணவர்களும் கற்றறிந்த பெருமக்களும் இப்பகுதிக்கு எழுதியனுப்பலாம். கற்பனை நிகழ்ச்சிகளைவிட உண்மை நிகழ்ச்சிகளே பெரிதும் வரவேற்கப் பெறுகின்றன. வெளியிடப் பெறும் ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் இரண்டு உருபாக்கள் அனுப்பப் பெறும். — **ஆசிரியர்.**)

கை கொடுத்த பாட்டு!

ஆங்கில நாடக ஆசிரியர் பெர்னார்டு சா தமக்கு இத்தாலிய மொழி சரிவரத் தெரியாமலிருந்தும் அம்மொழியில் புலமை பெற்றவர் என்று பெயர் பெற்ற நிகழ்ச்சியைக் கீழ்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

''ஒரு கால் எம் நண்பர்களுடன் இத்தாலியில் உள்ள மிலான் நகர உண்டிச் சாலை யொன்றிற்குப் போயிருந்தேன். அனைவரும் உண்டு முடிந்ததும் சாப்பாட்டுச் செலவை அவரவரே செலுத்த விரும்பித் தனித் தனிப் பட்டியல் கேட்க விரும்பினோம். ஆனால் எங்களுக்குள் எவர்க்கும் இத்தாலிய மொழி தெரியாதாகையால் எங்கள்கருத்தை உணவுப் படைப் பாளனுக்குக் கூறமுடியாமல் விழித்தோம். உடனே எனக்கோர் இத்தாலியப் பாட்டின் அடியொன்று நினைவிற்கு வந்தது.

''ஒக்கனோ பெர் சோ; பெர்டுட்டி இல்சியலோ'' என்ற அடியை ஒப்பித்தேன். இந்தப் பாட்டின் அடியை ஒரு நாடகத் தில் கேட்ட நினைவு. ஆனால் இதற்குப் பொருள் எங்கள் திண்

டாட்டத்திற்கு ஒரு வழி வகுத்தது. "அவனவன் பாட்டை அவனவனே பார்க்க வேண்டும்; அதுவே எல்லார்க்கும் விருப்பம்"என்பதே அதன் பொருள். இதை அவன் புரிந்து கொண்டு ஒவ்வொருவருக்கும் தனித் தனிப் பட்டியல் போட்டுக் கொடுத்தான். இதிலிருந்து இத்தாலிய மொழியிலும் நான் புலமை பெற்றவன் என்ற பெயர் எனக்குக் கிடைத்து விட்டது".

○ ● ○

மாந்தப் பொறி.

புது முறை ஓவியத்தை வரைவதில் புகழ் பெற்ற இசுப்பெயின் நாட்டு ஓவியர் பிக்காசோ, தன் மனைவிக்கு அவளின் படம் ஒன்றை வரைந்து கொடுத்திருந்தார். பிற்காலத்தில் ஓவியர் அவளை மணவிலக்குச் செய்திருந்தார்.

ஒரு கால் அவள் வைத்திருந்த அப் படத்தைப் பிரஞ்சு நாட்டின் சுங்க மேலாளர்கள் கண்டு அது ஒரு புது வகைப் பொறியின் வரைபடம் என்று ஐயுற்று அவளைக் கேட்டனர். அது தன்னுடைய படமே என்றும்,முன்னாள் கணவர் பிக்காசோ வரைந்தது என்றும் கூறிப் போராடியும் அவர்கள் அவளை விடவில்லை. பெரிய பொறியியல் அறிஞர் ஒருவர் வருவிக்கப் பெற்றார். அவர் பல மணி நேரம் அப்படத்தை ஆய்ந்து பார்த்து விட்டு "இது ஒரு பொறியின் வரைபடம் என்பதில் ஐயமில்லை; ஆனால் இப்பொறி எந்த வேலையும் செய்யாது, அதனால் கவலையில்லை"என்றார். அதன் பின்னரே சுங்க நோட்டகர்கள் அவளை விடுவித்தனர்.

○ ● ○

வேப்பிலைத் துவையல்.

காந்தியடிகள் குடியிருந்த சபர்மதி பாழி (ஆசிரமம்) வீட்டிற்கு நாளும் பெரிய தலைவர்கள் பலர் வந்த வண்ணமாகவே இருப்பர். அவர்களெல்லாரும் பாழியில் சமைக்கும் உணவையே உண்ண வேண்டியிருந்தது. அடிகள் உணவைப் பொறுத்த மட்டில் மிகவும் கண்டிப்பாக விருந்தனர். நாச்சுவை, ஆரவாரம் நிரம்பிய உணவை அங்குப் பார்க்கவும் முடியாது. உடலுக்கும் உள்ளத்திற்கும் ஏற்ற உணவே அப்பாழியில் பரிமாறப்படும்.

ஒரு நாள் குமரப்பா, சர்தார் படேல், படோன் முதலிய பெருந் தலைவர்களெல்லாம் வந்திருந்தனர். அன்று நண்பகல் உணவில் வேப்பிலைத் துவையல் இடம் பெற்றிருந்தது. தம் முடன் உட்கார்ந்து உணவுண்ட ஐந்தாறு பெயர்க்கும் அடிகளே வேப்பிலைத் துவையலை இலைகளில் இட்டார். குமரப்பா அவர் கட்கு வேப்பிலைத் துவையலை உண்பது பெரிய தொல்லையாக விருந்தது. இலையில் போட்டது எதையும் மிகுதி வைக்கக் கூடாது என்பது அடிகள் கட்டளை. விழித்தபடியே குமரப்பா சுற்றும் முற்றும் பார்த்தார். உடனே துவையலை வழித்து ஒரே விழுங்காக மருந்து உண்பதுபோல் தொல்லைப்பட்டு விழுங்கி விட்டு அமைதியாக உணவை உண்ணத் தொடங்கினர். குமரப்பாவின் இலையில் துவையல் தீர்ந்து போனதை அடிகள் கண்டு கொண்டார். அவ்வளவுதான்! அடுத்த நொடிப் பொழு தில் மேலும் ஒரு கரண்டித் துவையல் அவர் இலையில் வந்து விழுந்தது......!

தமிழர்கள் தம் மக்கட்குத் தமிழ்ப் பெயர்களையே சூட்டுக.

கடந்த சித்திரைத் திங்கள் 6-ஆம் நாள் (19—4—63) அன்று ஆரணியில் உள்ள தேவிகாபுரத்தில், தூய தமிழ்க் காவலர் திரு கு. மு. **அண்ணல் தங்கோ** அவர்கள்தம் மூன்றாந் திருமகள் மு. அ. நாவுக்கரசி அம்மை, திரு. நா. உலக அரசன் அவர்களின் இரண்டாந் திருமகனுக்கு நடந்த பெயர் சூட்டு விழாத் தலைமைச் சொற்பொழிவில் 'தமிழர்கள் தம் மக்கட்குத் தூய தனித் தமிழ்ப் பெயர்களையே சூட்டல் வேண்டும்' என்று வேண்டிக் கொண்டு, தம் பெயரனுக்கு '**அண்ணல் தமிழ்ச் செல்வன்**' என்று பெயர் சூட்டினர்.

தண்டமிழ் வளர்க்கும் பெற்றியுடைய அப் பெற்றோர் தம் குழந்தையின் நினைவாகத் தென்மொழியின் வளர்ச்சிக்கு உருபா மூன்று அனுப்பியுதவினர். அவர்க்கு நம் உளமார்ந்த வாழ்த்தும் நன்றியும். — **ஆசிரியர்**.)

முன்னிதழ்த் தொடர்ச்சி.

அமெரிக்காவில்

காதல்புரி முறையும் மணவாழ்க்கையும்

இன்றோ எல்லாரும் "காதல்" புரியத் தொடங்கிவிட்டனர். "இது உடல் வேட்கையின் அழைப்பே; வேறன்று." என்று கூறுவோர் மிக அருகிவிட்டனர். எனினும் மணவியல் வல்லுநர் பலர் கருத்தின்படி அமெரிக்க இளைஞரின் உள்ளங்களில் ஆழப் பதிந்துவிட்ட இக் காதலுணர்வு, இன்பத்தினும் துன்பத்தையே அதிகமாக விளைவிக்கின்றது.

திரைப்பட நடிக நடிகையரின் புனைவழகில் மயங்கிக் காளையரும் கன்னியரும் பாழ்படுகின்றனர். எல்லாப் பெண்டிரும் திரைப்பட அழகியர்போல் மினு மினுப்பும் மயக்கும் தன்மையும் பெற்றிருப்பதில்லை. எல்லா இளைஞரும் திரைப்பட நடிகர்போல் நடிப்பளவிலாவது பெருமிதத் தோற்றமும் பீடு நடையும் கொண்டவராக இருப்பதில்லை. ஆயினும் நான்காவது வகுப்பும் படிக்காத ஒரு நாட்டுப்புற நங்கை திரைப்பட நடிகனின் அழகில் மயங்கி அவனைப் போன்றே தன்னைக் காதலித்துக் கனவுலகுக்கு அழைத்துச் செல்லத் தகுதியுள்ள இளைஞன் ஒருவன் எதிர்ப்படுவான் என ஏங்கிக் கிடக்கின்றாள். அதுபோலவே திரைப்படக் கன்னியரைக் கண்டு கண்டு கருத்து மயங்கிய இளைஞனும், அறிவும் திறனும் அன்பும் வாய்க்கப்பெற்ற ஒருத்தி முற்றுந் தனக்கேற்றவளாகவிருந்தும், திரைப்பட நடிகையைப்போல் தன்னைக் கவர்ந்து உள்ளத்தில் உணர்ச்சிக் கொந்தளிப்பை ஏற்படுத்தவில்லை என்பதால் அவளைப் புறக்கணித்து விடுகின்றான்.

மேலும் இத்தகு கவர்ச்சிக் காதல், சாசர் கூறியதுபோல முற்றிலும் பார்வையை மறைத்துவிடுகிறது எனலாம். உளவியலாளரும், குமுகவியலாளரும் கூறுவதுபோல, நம்மையறியா அகமனத் தூண்டல்களும் மன விழைவுகளும் இக் காதல் ஏற்படக் காரணமாக விருக்கக்கூடும். மேலோட்டமான மிகச்சிறிய

ஆங்கிலத்தில்: எர்னஸ்ட் ஆவ்மன். தமிழில்: தங்கப்பா.

காரணத்தால்கூட ஒரு நங்கை ஓர் இளைஞன் பால் உளத்தைப் பறி கொடுத்துவிடலாம். திரைப் படக் கதைத் தலைவன்பால் நல்லியல்புகளெல்லாம் ஒருங்கமைந்திருப்பதைக் கண்ட ஒருத்தி தன்னைக் கவர்ந்த இளைஞன்பால் ஏதாவது ஒரு நல்லியல்பைக் கண்ட அளவிலேயே அத்தனை நல்லியல்புகளும் அவனிடம் பொருந்தி இருப்பதாக நம்பிவிடுகின்றாள். பெற்றோரும் மற்றோரும் அவன்பால் எந்த நலனும் காணாது போயினும் அவள் தன் கருத்தை மாற்றிக் கொள்வதில்லை. இவ்வாறு பெண்ணால் பெரிது படுத்தப் பெறும் இளைஞனும், தன்னை அத்துணை ஆழமாகக் காதலிக்கும் நங்கை உயர்ந்தவளாகவே இருப்பாள் என நம்புகின்றான்.

காதல் பார்வையால் மறைப்புண்ட ஒரு பெண் தன் காதலன்பால் குடியும் மடியும் அளவற்று மிகுந்திருப்பதைக் கண்டாலும், அன்றிப் பிறர் எடுத்துக் காட்டினும் பொருட்படுத்தாமல் விடுகின்றாள். அதுபோலவே தன்னோடு பழகும் பெண்ணின் முகம் ஒரு திரைப்பட நடிகையின் முகத்தை நினைவூட்டினாற்போதும்; அவள் மடிமிகுந்தவளாகவும், மிகுந்த செலவாளியாகவும், குழந்தைகளையும் சமையல் தொழிலையும் வெறுப்பவளாகவும் இருப்பதைக்கூட ஓரிளைஞன் காணாதொழிகின்றான்.

வாழ்விற்குப் பொருந்தி வராதிருப்பதன்றியும், இக் காதல் செயற்கையான சூழலில் உருவாவதால் காதலிப்போர் ஒருவரை ஒருவர் உண்மையாக அறிந்து கொள்ளவும் வழி வகுத்துக் கொடுப்பதில்லை. திரைப் படத்துக்கோ, நாட்டிய மன்றுக்கோ ஒருத்தியை அழைத்துச் சென்று பழகிவிடுவதால் அவள் வீட்டினைத் தூய்மையாக வைத்திருத்தல், நோய் வாய்ப்பட்ட குழந்தையைப் பேணல் போன்ற குடும்பப் பணிகளில் திறமையுடையவள்தானா என்பதை ஒருவன் அறிந்து கொள்வான் என்பதில்லை. அதுபோலவே ஒரு நங்கையும், தன் விழியழகையும், இடையழகையும் காதலன் புகழ்ந்துரைக்கும் மொழிகளைக் கொண்டே இல்வாழ்வின் அமைவுகளைப்பற்றி அவன் என்ன கருத்துடையான் என்பதைத் தெரிந்து கொள்ளவும் முடியாது.

பெண்ணோடு பழகுகையில் பெருமிதமாய்த் திகழ வேண்டுமென்பதற்காகத் தம் உண்மை இயல்பை மறைத்தொழுகும்

இளையோர்பலர் ஆவர்; குற்றங்களை மறைத்து உண்மை இயல்பு வெளிப்படாதவாறு அவர் பழகுகின்றனர். அமெரிக்கா போன்ற விரிந்து பரந்த நாட்டில் இஃது எளிதேயாம். நண்பர் உறவினர் நடுவில் இயல்பு தோன்ற நடப்போர் அவர்தம் கண்காணிப்பில் லாத கல்லூரிகளிலும் வேற்றிடங்களிலும் தம் குற்றங்களை மறைத் தொழுகுவது எளிதன்றோ!

எனவேதான் அத்தகு சூழலில் முன்பின் அறியா இளைஞ ரிடம் சிறிதுநாட் பழகி அவரை மணந்து கொள்ளும் பெண்டிர், பின்னர் அவர் இருமனையாளராகவோ, மனைவியைக் கைவிட்ட வராகவோ, கள்வராகவோ, கயவராகவோ இருக்கக் கண்டு மனம் நொடிந்து போகின்றனர்.

இக்காதலுணர்வு எப்பருவத்தில் தோன்றுகின்றது என்பதில் கருத்து வேறுபாடு நிலவினும், ஆய்ந்து பெற்ற சில உண்மைகள் அதிர்ச்சியையே தருகின்றன. அமெரிக்க நகரமொன்றில் ஐந்தாம் வகுப்பில் கற்கும் பத்தாண்டுச் சிறுவர் சிறுமியர் தத்தமக்குள் ஒவ்வொரு காதலரைப் பெற்றிருப்பதாகத் தெரிய வந்தது.

சிறுவரில் செம்பாதியரும் சிறுமியருள் மூன்றிலொரு பங்கினரும் ° நாட்குறியில் (Dating) ஈடுபட்டுள்ளனர். மூன்றி லொரு பங்கினர் முத்தத்தின் இனிமை துய்த்தவராகத் தெரிய வந்தது. "பத்தாண்டில் முத்தச் சுவை உணர்ந்தார் பதினைந்தா மாண்டில் என்ன ஆவரோ?" என்று பிரொடரிக் என்னுமறிஞர் திகைத் துரைக்கின்றார்.

கையிற் பந்தும் கக்கத்துப் பாவையும் கொண்டு விளையாட வேண்டிய பருவத்தில் களவு வந்ததெவ்வாறு என்பது வியப் பாகவேயுள்ளது. இவ்வழக்கத்தை வளர்த்தவர் பெற்றோரே என்பர் ஆய்வாளர். இதனை விரும்பாத பெற்றோரும், தாம்

° நாட்குறி என்பது, ஓர் இளைஞன் நாள் ஒன்றைக் குறித்து, அந்நாளில் தனக்குகந்த சிறுமியைத் தன்னோடு தனியிடம் அழைத்துச் செல்வது. காதல்புரிவதின் தொடக்கநிலை இது. (தமிழ் இலக்கியங்களில் உள்ள பகற்குறி இரவுக்குறி போன்றது.)

பழைமை விரும்பிகள் என்ற ஏசல் பெறக்கூடாதே என்று காலத்தோடொத்துப் போகின்றனர். பத்தாண்டிலேயே தம் மக்கள் "காதல்"(!) புரியவேண்டும் எனப் பெற்ருேர் விரும்புவது ஆய்வாளர்க்கு வியப்பூட்டுகின்றது!

தாம் பெருத வாய்ப்பினைத் தம் மக்கள் பெறுவதே இத்தகு பெற்ருேர் எய்தும் மகிழ்விற்குக் காரணமாகலாம். மற்றும் தம் காலத்தில் இத்தகு குமூக மதிப்பினைப்பெற வாய்ப்பற்றுப்போன பெற்ருேர் தம் மக்கள் அம்மதிப்புப் பெறுவதை வரவேற்கின்றனர் போலும்! தம் பருவக்காலத்தே கட்டுப்பாட்டுள் அடங்கியும் இடர்ப் பல பட்டும் புழுங்கி வளர்ந்தது போலத் தம் மக்கள் வளராதிருக்க நல்லதொரு சூழல் உருவாகி இருப்பதாகக் கருதி அவர்கள் ஏமாறுகின்றனரோ என்று எண்ணவும் இடமுண்டு.

ஆனல், இவ்வழக்கத்தால் நன்மையினும் தீமையே அதிகமாக விளைகின்றது. ஏழையாயினும், செல்வராயினும் புறமதிப்பினரேனும் அஃதற்ருரேனும் பருவ நாட்களின் சிக்கல்களும் மன அசைவுகளும் அனைவர்க்கும் பொதுவே.

நாட்குறி நடத்தும் இளைஞர்தம் கதைகளை ஆய்வாளர் கேட்டுணர்ந்து "கொடுமை கொடுமை"என அலறுகின்றனர். பத்தாண்டிலேயே காதல் தொடங்கி மணப் பருவம் எய்து முன்பே உடலுணர்வில் முனைந்து கிடப்போர் பலர். வெறும் நண்பர் என்றே கூறுதற் காகாதவர் காதலர் என்றழைக்கப்படும் போலி நிலையைப் பெற்றுவிடுகின்றனர். ஏதோ விருந்திரு ஒன்ருக நாட்டியமாடியதால் ஒன்ருக வைத்துப் பேசப்பட்டவர் அவர்கள். பின்னர் அப்பிணைப்பு வளர்ந்து நாட்குறியும் நிகழ்ந்து விடுகின்றது. அத்தகையோர் உடலுணர்வு விஞ்சும் வேளைகளில் ஒழிய மற்ற வேளைகளில் உளப் பொருத்தமோ கருத்துப் பொருத்தமோ இல்லாமையால் – ஒருவர்க் கொருவர் மகிழ்வூட்டுவதுமில்லை; துணையாய் இருப்பதுமில்லை. மாருக வெறுப்பையே ஊட்டிக் கொள்கின்றனர்.

இந் நாட்குறியில் தோளணைதல் (Necking) என்னும் களியாட்டும் பெரும் பங்கு கொண்டுள்ளது. பெரும்பாலான இளைஞர் இத்தழுவலாட்டத்தில் ஈடுபட்டவராகவும் புணர்ச்சி இன்பம்

துய்த்தவராகவுமுளர். ஆய்ந்து பார்த்ததில், முப்பத்தாறு சிறுமிகளுள் ஒருத்தியே அவ்வகையில் ஈடுபடாதது தெரியவந்தது. மற்ற முப்பத்தைவரும், குறிநாள்தோறும் ஒரு மணியளவாகிலும் இக் களியாட்டத்தில் ஈடுபட்டிருந்தனராம். இவற்றுள் முன்பின் அறியாரோடு ஈடுபட்ட நாட்களும் அடங்கும்.

பத்தாண்டுகட்குமுன் வின்ஃசீட்டன் எர்மன் என்பார் கல்லூரி மாணவர் பலரை ஆய்ந்ததில் காளையரில் 68 விழுக்காடும், மகளிரில் 14 விழுக்காடும், உடலுறவில் ஈடுபட்டிருந்ததாகத் தெரியவந்தது. இன்று எண்ணிக்கை பெருகி இருக்கலாம்.

இளமையிலேயே இவ்வாறு நெருக்கமெய்தி விடுவதால் மணப் பருவம் வருங்கால் சலிப்புத்தான் விஞ்சுகின்றது. சிலரின் காதல் இயல்பாகவே தேய்ந்து மாய்ந்து போகின்றது. சிலர் விலக விரும்பினும் இயலாதவராய் முள்மேல் நடப்பதுபோல் வாழ்கின்றனர். பெண்ணைப் புண்படுத்தக் கூடாதே என்று ஆணும், விட்டால் வேறிளைஞன் கிடைப்பதரிதாயிற்றே எனப் பெண்ணும் தொடர்பை முறித்துக்கொள்ள அஞ்சுகின்றனர். என்றுவது வலிந்து முறிவு நேரும் பொழுது இருவர்க்குமே கேடு விளைகின்றது.

உருவாலும் திருவாலும் இயல்பாலும் ஒத்தவரிடையே உண்மைக் காதல் மலரத்தான் செய்கின்றது. காதல்புரிமுறை (Courtship) பல்வேறியல்பினரையும் ஒருங்கிழுத்துக் கூட்டுதலான் ஒருவர் தன்னேடொத்த உளப்பாங்கினரைத் தேட இடமில்லாததாக்கி, வேறுபாடுகளைப் புறக்கணித்து உடல் வேட்கையின் அடிப்படையிலேயே மணம் புரிந்து கொள்ளவும் வாய்ப் பேற்படுத்திக் கெடுத்துவிடுகின்றது என்பதும் உண்மையே. எனினும் இவ்வழக்கம் விழிப்பாகப் பயன்படுத்தப் பெற்றுல் நலம் பயக்கும் எனலாம். தனக்கேற்ற துணையைத் தேடுவதற்கு இதனை ஒரு வழியாக மட்டுமே கொண்டு கிளர்ச்சி வயப்பட்டு விடாமல், உண்மை இயல்பை மறைத்தொழுகாமல் நடந்தால் வெற்றி கிட்டலாம். (தொடரும்) *

தென்மொழித் தொகுப்பு.

பொங்கல் மலர் இடையிணைந்த, ஒன்று முதல் பதினாறு, **தென்மொழித் தொகுப்பு** விலைக்குக் கிடைக்கும். விலை 5–50 உருபா. உருபா ஆறு அனுப்பின் பதிவஞ்சலில் அனுப்பப் பெறும். — அமைச்சர்.

ஒறுத்தல்.

மாரி - அறவாழி.

தங்கப்பனின் மூச்சு எந்த விநாடியிலும் நின்று விடலாம். இப்பொழுது அவன் உயிர் காலன் கையிலில்லை; எதிரே உட்கார்ந்து கணக்குகளைப் பார்த்துக் கொண்டிருக்கும் ஆய்வாளரின் தூவல் முனையிலிருக்கிறது.

‘‘......இதோ...இன்னும் சிறிது நேரத்தில் என் வாழ்வின் அச்சாணி கழன்றுவிடப் போகிறது......’’ என்று எண்ணிய பொழுது, தனது இளம் மனைவியின் முகமும், பிறக்கப்போகும் மகவின் கற்பனை உருவமும் கண்களுக்குள் நிழலாடின.

ஆட்சியில் உட்கார்ந்து கொண்டே பல கோடி உருபாக்களை ஏப்பம் விடுகிறார்களே சிலர், அவர்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் தங்கப்பன் செய்தது அப்படியொன்றும் பெரிய குற்றமன்று! பிள்ளைப் பேற்றுக்காகப் பிறந்தகம் சென்றிருக்கும் மனைவிக்குத் திடீரென்று வலிப்பு நோய் வந்துவிட்டதென்றும், மருத்துவம் பார்க்கக் காசின்றி அவளைப் பெற்றவர்கள் துடிக்கிறார்கள் என்றும், பேரிடி போன்ற செய்தி அவன் செவிகளில் விழுந்தபொழுது அவன் நிலை எப்படியிருந்திருக்கும் என்பதை, இந்தி திணிக்கப்படுவது கண்டு துடிக்கும் உண்மைத் தமிழ் நெஞ்சங்களின் நிலையுடன்தான் ஒப்பிட்டுப் பார்க்க இயலும்..

அவன் எடுத்தது (திருடியது அன்று) சிறிய தொகைதான். மனைவிக்கு இரண்டு ஊசிகள் ஏற்றி நான்கு வேளை மருந்து வாங்கத்தான் அது போதும். இருந்தாலும் சட்டம் விட்டு விடுமா? சட்டம் விட்டாலும் ஆய்வாளர் விடுவாரா? இரண்டாண்டுகளுக்கு முன்னர் அவருக்கும் தங்கப்பனுக்கும் ஏற்பட்ட ஒரு வழக்கில், தங்கப்பன் அவரை வழக்கு மன்றம் வரை இழுத்துச் சென்று இருநூறு உருபா ஒறுப்புக் கட்டணம் செலுத்துமாறு செய்துவிட்டான். அன்றிலிருந்து இருவருக்கும் பேச்சுப் புழக்கமில்லை; மாறுப் பகை வளர்ந்துவிட்டது.

அத்தகைய பகைவரே இன்று தன் கணக்குகளை ஆராய வந்திருப்பதைக் கண்டு தங்கப்பனின் மனம் பட்டபாட்டை எழுதிக் காட்ட இயலாது. பெருமூச்சு விட்டான். வளைவான கை விலங்குகளும் வலுவான இரும்புக் கதவுகளும் மின்னலிட்டு மறைந்தன.

''......ச்சே!...எவ்வளவு இழுக்கு!...இனியும் உயிரை வைத்துக் கொண்டிருக்க வேண்டுமா?......,'

ஆய்வாளர் கண்ணுடியை விரல்களால் உயர்த்திக் கொண்டே தலையை நிமிர்த்தினுர். அந்தக் கண்ணிமைப் பொழுதிற்குள் தான் எத்தனை ஆயிரம் முடிவுகள் தங்கப்பன் நெஞ்சில் இறங்கின! ஆய்வாளர் மீண்டும் தலை குனிந்தார். கணக்குகளில் ஆழ்ந்தார்.

இன்னுசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயஞ் செய்து விடல் — குறள். 314.

''..... ஆ!.. இதுதான் தக்க நேரம்!...இனியும் காலந்தாழ்த்திளுல் தலையில் கல் விழுந்து விடும்...அதற்குள் எங்காவது ஓடி முடிவைத் தேடிக்கொள்ள வேண்டியதுதான்......''

இத்தகைய எண்ணத்தின் இறுக்கத்தில் அவன் சிக்குண்டு தவித்துக் கொண்டிருக்கையில் ஆய்வாளர் அமைதியோடு எழுந்தார். புன்முறுவலுடன் அவனை நோக்கி ''...எல்லாம் சரியாகவே இருக்கிறது ..'' என்று கூறிக் கையெழுத்திட்டு வெளியே நடந்தார். விடைபெற்று வெளியேறிய அந்தப் பெயர்வழியை வியப்போடு பார்த்துக்கொண்டு நின்றுன் தங்கப்பன். அவன் நெஞ்சில் ஐயப்பாடு.

''..... இவருக்கென்ன...அறிவுக் கலக்கமா?... உள்ளங்கை நெல்லிக்கனிகூடப் பார்வையில் விழவில்லையா?......ஒருவேளை இப்படியிருந்தால்.. !!...... நான் செய்த தீங்கை மறந்து விட்டாரா?......ஆம்!... இப்படித்தானிருக்க வேண்டும்... ஆள் அழுத்தக்காரன்...என்னை விட்டுப் பிடிக்கலாம் என்று பேசாமல் போயிருக்கிருர்......''

மழை விட்டும் தூவானம் விடவில்லை. தங்கப்பன் இரவெல்லாம் புரண்டு கொண்டிருந்தான். உறக்கமில்லை; கொடிய கனவுகள்.

விடிந்தது. உரிய நேரத்தில் அலுவலகம் சென்றான். தன்னை இழுத்துச் செல்ல விலங்குகளுடன் வரும் ஊர்க் காவலர்களை எதிர்பார்த்துக் கொண்டே கணக்குப் பேரேடுகளைப் புரட்டினான்.

சிறிது நேரத்தில் ஒருவர் வந்தார். அவர் இரும்புத் தளைகளுடன் வரவில்லை. அஞ்சல் உறை ஒன்றை நீட்டிவிட்டுச் சென்றார்.

அனுப்பியவரின் முகவரியைப் பார்த்தான் தங்கப்பன். தூறிக் கொண்டிருந்த தூவானம் பெருமழையாக இடி மின்னலுடன் பொழியத் துவங்கியது.

ஆம்! நேற்று வந்து சென்ற ஆய்வாளரிடமிருந்து வந்திருந்தது அந்த அஞ்சல். தன்னைச் சரியானபடி பழி தீர்த்துக் கொண்டிருக்க வேண்டும் அவர் என்று எண்ணினான்.

நடுங்கிய கைகள் உறையைக் கிழித்தன. கண்கள் இருண்டன. நெஞ்சு படபடத்தது. வாய் முணு முணுத்தது.

"......உன் அலுவலகப் பணத்தில் நேற்று இருபது உருபா குறைந்திருந்ததைக் கண்டு பிடித்தேன். அப்பொழுதே உன்னைச் சிறைக்கு அனுப்பியிருக்க வேண்டும். அதுதான் சட்டம். ஆனால் அதை நான் விரும்பவில்லை......

இத்தனை ஆண்டுகளாக வேலையைப் பொறுத்த மட்டில் நேர்மையிலிருந்து மயிரிழையளவும் வழுவாமல் நீ நடந்து வந்திருக்கிறாய் என்பதை அறிவேன் ... நேற்று நழுவி விட்டாய் ... உனக்கு இருப்பதாக நான் கருதிய சூழ்நிலையின் கொடுமையை, நீ எனக்குச் செய்த தீங்கை மறந்து சிறிது நேரம் நினைத்தேன்.

மாதக் கடைசியாகையால் என் கையிலும் பணமில்லை... வழிச் செலவுக்கென வைத்திருந்த இருபது உருபாயை உன் அலுவலக இருப்பில் போட்டுக் கணக்கைச் சரி செய்துவிட்டேன் ..... நீ போட்ட வழக்கில் நான் கட்டிய தண்டப் பணம் இருநூறு உருபாக்களோடு இதையும் சேர்த்துக் கொண்டேன் ... இனியாகிலும் இது போன்ற குற்றங்களைச் செய்யாதே......"

மடல் முடிந்தது. கண்களில் நீர்த்துளிகள் உருண்டன.

இப்பொழுது பெருமழையுமில்லை; தூவானமுமில்லை. அவன் உள்ளத்தில் நன்றியுணர்வும் அன்பின் வலிமையும் சிலுசிலிர்த்தன! அந்தத் தெய்வ மகனை நெஞ்சார ஒருமுறை வழுத்தினான்.

மணிமொழிமாலை

பிறரை வருந்தவிட்டு ஒருவன் சூழ்ச்சியால் வௌவிக் கொண்ட செல்வம் விரைவில் அவனை வருந்தவிட்டு நீங்கும்.

○ ○ ○

விளக்கிச் சொல்லாவிடத்தும் தாமேஉணரும் உணர்வாற்றல் உடையார் முன் ஒருவர் ஒன்றைச் சொல்லுதல், வளர்கின்ற பயிர்க்கு நீர் சொரிந்தது போலப் பயன்படும்.

○ ○ ○

பல்லாற்றுனும் விளங்கக் கற்றும், கற்றவற்றின் உயர் வுணர்ந்தும், பயன் கருதி அவற்றைப் பிறர்க்குரைத்தும், தான் மட்டும் அவை வழி நில்லா வொருவனைப் போன்ற பேதை ஒருவருமிலர். — திருவள்ளுவர்.

○ ○ ○

சிலர் பெரியோர்களாகவே பிறக்கின்றனர்; சிலர் இடை விடா முயற்சியால் பெரியோர்களாக ஆகின்றனர்; சிலர் பெரி யோர்களாக ஆக்கப்படுகின்றனர்.

○ ○ ○

எல்லார்க்கும் உன் செவிகளைக் காட்டு; ஒரு சிலர்க்கே உன் குரலைக் காட்டு.

○ ○ ○

உனக்குத் தெரிவதை விட, அதிகமாகத் தெரிந்து கொள்; உனக்குத் தெரிந்ததை விடக் குறைவாகப் பேசு! – சேக்சுபியர்

○ ○ ○

துறக்க (சொர்க்க) த்தில் அடிமையாயிருப்பதை விட, நிரய (நரக)த்தில் அரசனாய் இருக்கலாம். – மில்டன்.

ஒரு சிலரே எண்ணிப் பார்க்கின்றனர்; மிகப் பலர் பேசிக் கழிக்கின்றனர். – மாண்டேகு.

○ ○ ○

வரலாற்றை உண்டாக்குகின்றவர்களுக்கு வரலாறு எழுத நேரம் ஏது? – மெட்டெர்னிச்

பொன் பேசுகையில் நாக்கின் கூர்மை மழுங்குகின்றது.
- குவாகு.

○ ○ ○

எங்கு உள்ளம் இருக்கின்றதோ, அங்குவீடு இருக்கின்றது.
– பிளேனி.

○ ○ ○

பசிக்கின்ற வயிற்ருேடு உள்ள எவனும் நாட்டுப்பற்றுள்ளவனுக இருக்க முடியாது. – வில்லியம் கூப்பர் பிரேன்.

○ ○ ○

எங்கு அறியாமை இருக்கின்றதோ, அங்குப் போலியறிவே ஆட்சி செலுத்தும். – கிரே.

○ ○ ○

குருட்டுத்துணிவு என்பது அறியாமையின் குழந்தை.
— பேகன்.

○ ○ ○

தன்னந்தனியனுக நின்று எவனொருவன் செயற்கரிய வினையைச் செய்கின்ருனே அவனே இவ்வுலகத்தில் வலிமிகுந்தவன். — இப்சென்.

○ ○ ○

பெருந்துணிவு என்பது உள்ளம் உடைந்து போகாமல் தாங்கற்கரிய தோல்விகளை எதிர்த்து மேற்செல்வதே.
— இங்கர்சால்.

○ ○ ○

தன் கால்களைக் கொண்டு தீர்மானிப்பவன் எவனே அவனே கோழை. –– அம்புரோசு பியெர்சு.

○ ○ ○

குடியரசு என்பது, 'உன்னைப்போல் முழு நலத்துடன் நான் இருக்கின்றேன்' என்பதன்று; 'என்னைப்போல் முழு நலத்துடன் நீ இருக்கின்ருய்' என்பதே. — தியோதோர் பார்க்கர்.

○ ○ ○

மக்கள் வாழ்க்கையில் இரண்டுதுயரங்களே சூழ்ந்துள்ளன. ஒன்று உள்ளம் விரும்பியவற்றைப் பெருததால் ஏற்படுவது; மற்றொன்று அவற்றைப் பெறுவதால் வருவது.
— பெர்ஞர்டுசா.

ஆங்கில மொழியாக்கம்

The Son of The Soil

(Written in a Bus)

(தென்மொழி பங்குனி யிதழில் வெளிவந்த 'குடி செய் நன் மகன்' என்ற பாடலின் ஆங்கிலப் பெயர்ப்பு.

Come and sit by me, O son *of the soil!*
Who toils to *feed the world,* and yet *despised*
As low caste; wherefore do you shrink like this
Before these lordly men who frown at you
Seeing your dirt-stained body and your *rags*
And hesitate to seat you *by their side?*
Care not for *them, but come* and sit by me,
What *if your body's* dirt-besmear'd and sweating?
O peasant, you are better thousand times
Than many men here. who, although are dressed
In white and *gaily groomed, perfumed* and trim,
Have rotten *hearts;* their thoughts do stink outside;
And *thieves* and drunkards, lustful knaves are they!
I loathe to touch them. But, you peasant pure.
I would embrace you with a brother's *heart!*
Come. let your body rub *against* my own;
My clothes be *dirtied* by your soiled clothes;
Let your *sweat* moisten me; let shoulders touch
So that our hearts commingle, gentle soul!
You are the wealth, the back bone *of the* world;
O worthy son of Tamil Land, *from* birth
You drudge *for others,* self-forgetting. meek
I wish your calm contentment I possessed
To make me stronger in my selfless work.

மூலமும், பெயர்ப்பும்: ம. இலெ. தங்கப்பா.

புடவி
(UNIVERS)

இம் மண்ணுலகமே புடவியின் நடு நாயகமாய் அமைந்த தென்று கருதிய காலமெல்லாம் போயிற்று. கோடிக்கணக்கான விண்மீன் தொகுதிகள் அடங்கிய அளவிடப்படாத இப்புடவியில், ஒரு தொகுதியுள் கிடக்கும் பல கோடிக்கணக்கான உடுக்களுள் சிறியதோர் உடுவாகச் சுழன்று கொண்டிருப்பதே ஞாயிறு. அஞ்ஞாயிற்றைச் சுற்றிச் சுழன்று கொண்டிருக்கும் நுண் சிறு கோளே இம் மண்ணுலகாகும்.

ஆய்வாளர் கண்டறிந்தன வெல்லாம் இப்புடவியின் மிகச் சிறிய பகுதியே யாகும். ஆயினும் கண்டறிந்ததான இப்பகுதியின் விளிம்பை நாம் தொட வேண்டுமென்றாலும் ஒரு நொடியில் 186300 கற்கள் (ஒளிபரவும் விரைவு) விரைந்து சென்றால் 600 கோடி ஆண்டுகள் ஆகும். இக்காலம், மண்ணுலகில் மாந்தர் வாழ்ந்து வருவதாக மதிப்பிடப் பட்டிருக்கும் காலத்தைப் போன்று 20000 மடங்காகும்.

புடவியிலுள்ள பல்வேறு கோள்களும், உடுக்களும் ஒளித் தொகுதி (Galaxy) களாகவும், அப்படி ஐநூற்றுக்கு மேற்பட்ட ஒளித் தொகுதிகளடங்கிய பேரொளித் தொகுதி (Cluster) களாகவும் விரிந்து பரந்துள்ளன.

நமது தொகுதியை உள்ளடக்கிய பேரொளித் தொகுதி (Cluster)-இல் பதினன்கு ஒளித் தொகுதி (Galaxy) களே உள்ளன. இது பிறவற்றேடொப்பிடுங்கால் மிகச்சிறியதே யாயினும் நாமறிந்த வெள்ளி மண்டிலங் (Stellar System) களில் பெரியதாகும். இதனுள்ளமைந்த ஏறத்தாழப் பத்தாயிரங்கோடி விண்மீன்களை ஒரு நொடிக்கு ஒன்று மேனி கணக்கிடுவதாயின் முழுவதையும் எண்ணி முடிக்க 2500 ஆண்டுகள் ஆகும்.

கண்ணிற்கு நேராக விளிம்பு தோன்றுமாறு பார்த்தால் ஒளித் தொகுதியின் பால் வெளி மண்டிலம் ஒரு தட்டையான தட்டினைப்போல் தோன்றும். அதன் நடுப்பகுதியிலும், அதனைச் சூழ்ந்தும் விண்மீன் படலங்கள்

செறிந்து கிடக்கின்றன. நேர் மூக்கு (Right angle) ஆகப் பார்த்தால் ஒரு பூத "வண்டி உருளை" போல் தோன்றும். அதன் பல்வேறு ஆரைக்கால்கள் மய்யத்தினின்று எழுகின்றன. அத்தகைய ஓர் ஆரைக்காலில் தான் ஞாயிறு உள்ளது. அஞ் ஞாயிறும் உருளையின் மய்யத்தினின்று நெடுந்தொலைவில் உள்ளமையான் உருளையின் குடத்தை (Hub) ஒரு முறை சுற்றி வருவதற்கு 200கோடி ஆண்டுகள் பிடிக்கும். ஞாயிறுதோன்றிய காலத்தை அடிப்படையாக வைத்துப் பார்க்கையில், இது வரை 20 சுற்றுக்களே அது சுற்றியிருக்க வேண்டும் எனக் கணக்கிட்டுள்ளனர்.

பால் வெளி மண்டில உடுக்கள் ஓர் ஒழுங்கின்றி நடுவிற் செறிந்தும் செல்லச் செல்லக் கலப்பாகவும் பரவியுள்ளன. நடு விலுள்ள அளவிறந்த உடுக்கள் மண்ணினின்று நோக்கப் புலனுகா மல் அணுப்படலங்களால் மறைக்கப்பட்டுள்ளன. எனினும் அத்திசையை நோக்கினுல், மிகவும் அடர்ந்து செறிந்து கிடக்கும் உடுத் தொகுதியைக் காண்கிறோம். எல்லாம் கலந்து மயங்கி வெள்ளொளி மண்டிலமாகக் காட்சியளிக்கின்றது. இதையே நாம் பால்வெளி மண்டிலம் என்று கூறுகின்றோம்.

இத் தொகுதியைச் சூழ்ந்தவை இம் மண்ணுலகு சார்ந்த உடுக்கூட்டம் எனப்படும். அவற்றிற்கப்பால் பல நூறு கோடிக் கணக்கான வடிவ வேறுபாடுடைய தொகுதிகள் கிடக்கின்றன. நம் தொகுதியோடு ஒப்புநோக்கத்தக்க ஒன்று "ஆண்ட்ரமீடா" (Andromeda) எனும் பெருந் தொகுதியாகும். இது நம்மிட மிருந்து 20 இலக்கம் ஒளி ஆண்டுகளின் தொலைவில் உளது.

ஆய்ந்து காணக்காண விரிந்து பரவும் அகண்ட வெளி யிலைப் போலவே, உடுத் தொகுதிகளும் அவையடங்கிய ஒளித் தொகுதிகளும், அவை சான்ற பேரொளித் தொகுதிகளும், அவையுள்ளிட்ட இப்புடவியும் முடிவின்றிப் பெருகிக்கொண்டே போவதுதான் என்ன பெருவியப்பு!

"அற்புத எண்கள்"

(ஆக்கியோர் திரு. நடேச பிள்ளை. வழக்குரைஞர். கடலூர். விலை உரூ. 2–50)

கணியக் கலையோடு தொடர்பு வாய்ந்த எண் கலை (Numerology) நூல் இது. பிறவியால் மக்கட் கமைந்த எண்கட்கும் அவர்தம் வாழ்வுக்கும் நெருங்கிய இயைபு உண்டு என்ற கருத்தை விளக்கி அக் கொள்கைக்குத் தக்க சான்றுகளையும் ஆசிரியர் இந்நூலில் தருகின்றார். பிறப்போடு தொடர்புடைய எண்களின்படியே ஒருசிலர் தம் வாழ்க்கை நிகழ்ச்சிகள் அமைந்திருக்கும் வியத்தகு நிலையினை ஆசிரியர் தாம் நேரில் அறிந்த சிலர் வாழ்வின் வாயிலாக விளக்குகின்றார். வாழ்க்கை ஓர் ஒழுங்கமைதியோடு இயங்குகின்றது என்பதை எடுத்துக் காட்டுமாறு இச்சான்றுகள் அமைகின்றன.

ஒன்று முதல் ஒன்பது வரை ஒவ்வோரெண்ணிற்குமுரிய கோள்களின் தன்மைக்குத் தக்கவாறு அவ்வவ்வெண்ணிற் பிறந்தவர்தம் இயல்புகள், பண்புநலன்கள், வாழ்க்கைப்போக்கு எவ்வாறு அமைகின்றன என ஆசிரியர் நன்கு விளக்குகின்றார். உலகறிந்த பெரியார் பலர் வாழ்வில் அவர்தம் எண்களின் இயக்கங்களை எடுத்துக்காட்டி விளக்கியுள்ளமை இக்கலையின் உண்மையை அனைவரும் விளங்கிக் கொள்ளப் பயன்படும்.

பெயரின் எழுத்துகட்கு எண் கொடுப்பதில் ஒரு வரையறுக்கப்பட்ட முறை பின்பற்றப் பெறவில்லை. மற்றும் ஒரே பெயர் ஆங்கிலத்தில் பல வகையாக எழுதப் பெறும் பொழுது ஒவ்வொரு வகைக்கும் எண் கணிப்பு வேறுபடுகின்றதே! எதனை இயற்கையில் அமைந்ததாகக் கொள்வது? மொழி நடையும் பிழையின்றி அமைந்திலது. மறு பதிப்பிற் குறை நீக்க வேண்டுகின்றோம். இந்நூல் தமிழில் புது முயற்சி, வரவேற்கத்தக்கது.

— "கல்லாடன்"

போரில் அறம்பிறழ்ந்த தமிழரசர்.

புலவர். சீனி - சட்டையப்பன்.

பழம் பெருமையும் வரலாறும் மறந்து புதுமயக்கங்களில் வீழ்ந்து தன்னுணர்வழியும் இற்றைத் தமிழகம் புத்தெழுச்சி பெறுதற்கொரு தூண்டு கோலாகவே, பண்டை வரலாற்றையும் பெருமிதத்தையும் தமிழர்க்கு நினைவூட்ட வேண்டியதாகின்றது. பழங் கனவு கண்டு வீண் பெருமை பேசித் தற்கால இழுக்கை மறந்தோ மறைத்தோ வாழ்வதற்காக வன்று. பழந் தமிழர்தம் வாழ்வை எடுத்தியம்பும் நாம், அவ்வாழ்வு எல்லா வகையானும் பாராட்டற்குரியதே என்று கொள்வோமாயின் அது மூட நம்பிக் கையே ஆகும். குறைகளையும் பிழைகளையும் ஒப்புக் கொள்ளத் தான் வேண்டும்.

புலவர்களால் வியந்து பாராட்டப்பெறும் பண்டைத் தமிழ ரின் மற வாழ்க்கை ஆய்வுக்குரியதாகும். அக்காலத்தில் போர் புரிவது மன்னரின் இன்றியமையாக் கடமைக விருந்தது. அதை நாம் ஒப்புக்கொள்ளினும் போரால் பல கொடுமைகள் நிகழ்த்தி யதை மறைக்க முடியாது.

போர்க்கென நெறி வகுத்தவர் தாம் தமிழர். "**அறத்தாறு நுவலும் பூட்கை**" (புறம்-9)என அறமுறை சொல்லிப் போரிட் டனர் என்று நெட்டிமையார் கூறுகின்றார். எனினும் போர் எனத் தொடங்குமாயின் விளையும் தீங்குகள் அளவிடற்கரியன. படை மறவர்க்கு மட்டுமின்றி நாட்டு மக்கள் அனைவர்க்குமே துன்பம் நிகழ்ந்தது. போர் அறத்தின்படி ஒரு சிலரை நீக்கியே போரிட்ட போதினும் போரின் முடிவில், தோற்றவர் நாடு வென்றவர் கையிற் சிக்கிப் பல்வகைத் துன்பங்கட்கும் ஆளாயது.

காலம் செல்லச் செல்ல, அறமுறை பிறழ்ந்து மறவெறி மிகுந்துகொண்டே வந்தது. பிற்காலத்தில் அந்நெறிப் பிறழ்வு எந்த அளவுக்குச் சென்றது என்பதை இங்குக் காண்போம்.

பெண்டிரைச் சிறைப் பிடித்தமை:-

பெண்டிரை விலக்கிப் போரிட்டதாக ஒன்பதாம் புறப்பாட்டு கூறுகின்றது. ஆனால் அதன்பின் முதலாம் இராசேந்திரன் வங்கத்து மகிபாலனொடு பொருது அவன்தன் பெண்டிரைக் கவர்ந்தான். இரண்டாம் இராசேந்திரன் மேலைச் சளுக்கியருடன்

போரிட்டுப் புறமுதுகிட்ட ஆகவமல்லனின் மனைவியரைக் கைப் பற்றினான். அவன் இளவல் ஈழத்து வெற்றியின்பொழுது விசய பாகுவின் மனைவியைக் கவர்ந்தான். சாளுக்கியப் போரிலும் சக்கரக் கோட்டத்துப் போரிலும் பெண்டிரைப் பிடித்தான். முதற் குலோத்துங்கன் சேர நாட்டுப் போரில் அவ்வாறே செய்தனன்.

பெண்டிரை மூக்கரிந்தமை:-

முதலாம் இராசாதிராச சோழன் ஈழத்தை வென்ற காலை அங்குப் புகுந்து வாழ்ந்த வீரசலாமேகன் புறங் கொடுத்தான். இராசாதிராசன் அவன் தாயையும் தமக்கையையும் மனைவியை யும் சிறையிட்டான். அத்துடனன்றி அத்தாயின் மூக்கையும் அரிந்தான். அவனது கல்வெட்டு இதற்குச் சான்றாகும்.

வேங்கிப் போர் வென்ற வீரராசேந்திர சோழன் பகைப் படைத் தலைவனாய சாமுண்டராயனின் தலையை அரிந்தான். அத்துடனன்றி அவன்தன் ஒரு மகளாகிய நாகலையை முகத் தொடு மூக்கு வேருக்கினான்.

பன்னரை இழித்தமை:-

பன்னரை (தூதரை) மதிக்கும் தொன்றியல் பண்பும் பின் னாளில் அழிந்தது. முதலாம் இராசாதிராசன், ஆகவமல்லனின் பன்னராக முறைவேண்டித் தம்மிடம் வந்த மூவருள் ஒருவற்கு ஐம்முடிகட்டி உருமாற்றி 'ஆகவ மல்லன்' என வக்கணைப்பெய ரிட்டான். மற்றொருவனுக்குப் பெண்ணுடை புனைந்து "ஆகவ மல்லி"எனப் பெயரிட்டான். அவர்களை நகைப்புக்கும் ஆளாக் கினான்.

மாற்றரசர்க்கு மானக்கேடு செய்தமை:

வீரராசேந்திர சோழனிடம் பல முறை பின்னிட்ட ஆகவ மல்லன் மீண்டும் ஒரு தடவை கூடற்சங்கமம் எனுமிடமே கள மெனக் குறித்து அவனைப் போர்க்கழைத்தான். அதை ஏற்றுச் சென்ற சோழன் ஒரு திங்கள் காத்திருந்தான். பிணியுற்றமை யான் ஆகவமல்லன் வந்தானில்லை. அதனால் வெகுண்ட சோழன் துங்கபத்திரைக் கரையில் ஆகவமல்லன்போல் உரு நாட்டிக் கழுத்தில் கண்டிகை பூட்டினான். புறமுதுகிட்ட செய் தியை எழுதிக் கழுத்தில் தொங்கவிட்டு மானக்கேடு செய்தான்.

— நடை ஓவியம்.

ஓடாய்த் தேய்ந்து உழைத்த காசு!

"தும்பி"

உயிர்களை விழுங்கும் முதுமையைப் போல் மெல்லப் படர்ந்தது இருள்.

கரும் பாறைகளுடன் மோதிய இரும்பு உளிகளின் இசை முழக்கம் ஓய்ந்தது! செம்மண் புழுதியின் பேயாட்டம் அடங்கியது.

கல்லோடு கல்லாய், மண்ணோடு மண்ணாய், பகலெல்லாம் ஒன்றிக் கிடந்த பாட்டாளிகள் இடுப்பைப் பிடித்த வண்ணம் எழுந்தனர். கண்காணி கொடுத்த காசைக் கணக்குப் பார்த்து வாங்கிக் கொண்டனர். கல்லுடைத்த சுத்தியல்களும், தட்டுக் கூடைகளும் ஒருபுறம் குவிந்தன! காலையில் கையொடு கொணர்ந்த கஞ்சிக் கலயங்கள் தோள்களில் தொங்கின! விடுபட்ட அம்புபோல் ஓடினர்; இளைப்பெடுக்கப் பறந்தனர்......... நிற்க நேரமில்லை! அருவியாய்ப் பெருகி வழியும் வியர்வையைத் துடைக்க ஓய்வில்லை! பழுக்கக் காய்ச்சி, நீரில் தோய்த்தெடுக்கப்பட்ட இரும்பைப் போன்ற கைகள்! கருங்காலியில் கடையப்பட்டவை போன்ற வன்மையான கால்கள்! பரட்டைத் தலை! இவையில்லையேல் உலகம் இல்லை அவர்கள் ஓடினர்!............ யாரையோ துரத்திக்கொண்டு செல்பவர்கள் போல்! ஆண்களும் பெண்களுமாய்! இருந்தவர்கள் முப்பது நாற்பது பெயர்கள்! .... இளைஞரும் முதியவரும்! .... நாள் முழுதும் கால் வயிற்றுக் கூழோடு, கல்லுடனும் மண்ணுடனும் போராடிக் களைத்தவர்கள் அவர்கள்! இத்துணை விரைவாக எங்கே போகின்றனர்?......தத்தம் குடிசைகளை நோக்கிப் போவதாய் இருக்கலாம்! கூழுக்குத் தேவையான பொருள்களை வாங்க

(முன்பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு எத்துணை நலஞ்சான்ற மன்னராயினும் போர் வெறியால் பல கொடுமைகள் புரிந்தனர். நெறி முறைகளை மண்ணாக்கினர். பகைவரை அழிப்பதே மறம் எனக் கருதினர். பண்டைக் காலத்தில் அவை தவிர்க்க முடியாததாயிருப்பினும் போற்றத்தக்கதா என்று எண்ணிப் பார்த்தல் வேண்டும். *

வேண்டுமே! குற்றிப் புடைத்துக் கூழோ கஞ்சியோ காய்ச்சிக் குடிக்க வேண்டுமே! குழந்தைகளைக் கொஞ்சி மகிழ வேண்டுமே!...... குடும்பத்தின் நல்லன தீயனவற்றை எண்ணிப் பார்க்க வேண்டுமே!

......ஏழை முகங்கள் நெஞ்சை உருக்கின! அவர்தம்நெற்றியில் நிழலிட்டிருந்த உலைச்சலும், விழிகளில் தேங்கியிருந்த பரபரப்பும் உணர்வைப் பிழிந்தன. எங்கேதான் போகின்றனர்?... ...பெருஞ்சாலை வளைவில் திரும்பியது அந்தப் பாட்டாளிக் கூட்டம்! ஒரு முடுக்கம்! ஒரு திருப்பம்!...அவர்கள் எவரையும் பொருட் படுத்தியதாகத் தெரியவில்லை .... ஓடினர்; ஓடிக் கொண்டே யிருந்தவர்கள் பெரிய திரைப்படக் கொட்டகையின் முன் நின்றனர்....... வியப்புடனும் கழிவிரக்கத்துடனும் நின்று பார்த்தேன். கண்கள் இருண்டன! ஒளி மழுங்கியது! விழிகளை இமைக்காமல் பார்த்துக் கொண்டே கல்லாய் நின்றேன். முண்டியடித்துக் காசு கொடுத்து வாங்கிய நுழைவுச் சீட்டுகளுடன் இடித்து நெருக்கித் தள்ளிக்கொண்டு திரைப்படக் கொட்டகைக்குள் நுழைந்து கொண்டிருந்தனர் அவர்கள்! அட உலகமே!

கோட்டகர்.

Collector என்ற சொல்லிற்குத் தண்டல் நாயகம் என்ற சொல் பொருத்தமில்லை என்று நம் கல்வியமைச்சர் திரு. பக்தவத்சலம் அவர்கள் மறுத்தனர். இதைக் 'கலெக்டர்' என்றே கூறலாம் என்று அறிவுறுத்தியும் (!) உள்ளார்.

Collector என்ற ஆங்கிலச் சொல்லிற்குத் 'தண்டல் நாயகம்' என்பது பொருந்துவதே. இதனையே திரு. தேவநேயரும், திரு. அ. கி. பரந்தாமனாரும் பிறரும் தக்க மொழி பெயர்ப்பெனக் கூறியுள்ளனர்.

'கோட்டம்' அல்லது 'கோட்டகம்' என்பன மாவட்டத்தைக் குறிக்கும் சொற்கள். கோட்டகத்தில் தலைவராக இருப்பவரே Collector ஆகையால், இவரைக் 'கோட்டகர்' என்று அழைப்பது மிகவும் பொருத்தமாக விருக்கும் என்று கருதுகின்றோம். இதுபற்றி முகவை எழுத்தாளர் மன்றத்தில் ஒரு தீர்மானமும் நிறைவேற்றியுள்ளோம்.

இங்ஙன்,

முகவை: **ஆடவல்லான்,**

முகவை: *மீராதேவி*-**ஆடவல்லான்.**

(இப்பகுதியில் திரவிட மொழிப் பெரும் புலவர், உயர்திரு. ஞா. தேவநேயப் பாவாணர் அவர்கள் விடையளிக்கின்றார். இலக்கணம், இலக்கியம், மொழி, நாடு, வரலாறு இவைபற்றிய உங்கள் ஐயங்களை இப் பகுதிக்கு எழுதியனுப்புங்கள்! கேள்விகளைக்,

"கேள்விச் செல்வம்,
தென்மொழி, திருப்பாதிரிப்புலியூர்"

என்ற முகவரியிட்டு அனுப்பவும். - ஆசிரியர்)

● சிலப்பதிகாரத்தில் 'கொலைக் களக் காதை'யில் 'சிறு முதுக் குறைவிக்குச் சிறுமையும் செய்தேன்' என்று கோவலன் கண்ணகியிடம் கூறியதாகக் காணப்படுகின்றது. சிறு முது குறைவி என்பது யாரைக் குறிக்கின்றது? கண்ணகியையா? அல்லது மாதவியையா? கண்ணகியைக் கூறுவதானால் அது ஏன் மாதவியைக் கூறியதாகக் கருதக் கூடாது?

– சு. ஆ. திருவாரூரன்,
திருப்பாதிரிப்புலியூர்.

○ "சிறு முதுக் குறைவி" என்பது கண்ணகியையே குறிக்கின்றது. கோவலன் முறைப்படி மணந்த குல மனைவி கண்ணகியே. அவன் அவளை மடந்தைப் பருவத்திலேயே விட்டுவிட்டு மாதவியொடு கூடிப் பதினைந்தாண்டுபோற் கழித்தான். கானல் வரிப்பாட்டிறுதியில், மாதவியை "மாயப் பொய் பல கூட்டு மாயத்தாள்" என்று கூறித் துறந்தான். மதுரை வழிப் போக்கில் கௌசிகன் கொணர்ந்து நீட்டிய மாதவி முடங்கலைப் படித்த பின்பும், "தன் தீதிலள்" என்று மட்டும் சொன்னானே யொழிய அவளை மீண்டுங் காதலித்தானல்லன். கூடி வாழாதும் சிலம் பொழிந்த அணிகலன்களை யெல்லாம் கவர்ந்தும், கண்ணகிக்கே கொடுமை செய்தான். அங்ஙனமிருந்தும் அவள் ஆற்றியிருந்த

தும், ''சிலம்புள கொண்ம்''எனச் சொன்னதும், மதுரைக்கெழுக என்றவுடன் எழுந்ததும், ஆறைங்காதம் அருவழி நடந்ததும், குரவரையும் பிற உறவினரையும் பிரிந்து அயலாரூரில் தனித்திருக்க நேர்ந்ததும், கணவன் வழிபாட்டிற் கடுகளவுங் குறையாமையும், கோவலன் கொடுமைகளையெல்லாம் ஓருருவாக்கி அவன்முன் கொணர்ந்து நிறுத்தின. அவன் கரையில்லாக் கழிவிரக்கங் கொண்டு, அவளை ஆற்றித் தேற்றுமாறு,

''மையீ ரோதியை வருகெனப் பொருந்திக்
கல்லத ரத்தங் கடக்க யாவதும்
வல்லுந கொல்லோ மடந்தைமெல் லடியென
வெம்முனை யருஞ்சுரம் போத்ததற் கிரங்கி
....
சிறுமுது குறைவிக்குச் சிறுமையுஞ் செய்தேன்
வழுவெனும் பாரேன் மாநகர் மருங்கீண்
டெழுகென வெழுந்தா யென்செய் தனையெனப்''

புலம்பி உள்ளமழிந்தான். இவ் வமையத்தில் ''சிறுமுதுக் குறைவி'' எவ்வகையிலும் எள்ளளவும் ஏனையொருத்தியைக் குறியாதென்பது தெளிதரு தேற்றம்.

● **தங்களால் எழுதப்பட்ட நூல்கள் எவை? அவற்றை எங்குப் பெற்றுக் கொள்ளலாம்?**

ஆ. வேலாயுதம், கொழும்பு-6.

○ கட்டுரை வரைவியல், உயர்தரக் கட்டுரை யிலக்கணம் (2 பாகம்), சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள், திரவிடத்தாய், முதற்றாய்மொழி, பழந்தமிழாட்சி, தமிழ் நாட்டு விளையாட்டு, சென்னைப் பல்கலைக் கழகத் தமிழகராதியின் சீர்கேடு, தமிழர் திருமணம், முதலியன. இவை, அப்பர் அச்சகம், 2 / 140, பிராடுவே, சென்னை-1 என்ற முகவரி கொண்ட சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற் கிடைக்கும். அங்குப் பெற்றுக்கொள்க.

● தமிழரின் பொற்காலம் எது?

○ தனித்தமிழே தழைத் தோங்கியதும், முத்தமிழிலக்கண விலக்கியங்களும் பல்கலை நூல்களும் முற்ற வழங்கியதும், வறுமை யறியப்படாதிருந்ததும், பிறப்பால் சிறப்பில்லாதிருந்ததும், ஆரியத் தொடர்பு அணுவளவுமில்லாததுமான, (குமரிக் கண்டத் தென் மதுரைத்) தலைக் கழகக் காலமே தமிழரின் பொற்காலம்.

● தமிழகத்தில் தோன்றிய ஒளவையார்கள் எத்தனைப் பேர்? எந்தெந்தக் காலங்களில் வாழ்ந்தனர்?

○ இற்றையிலக்கியத்தால் தெளிவாயறியப்பட்ட ஒளவையார் இருவர். ஒருவர் கடைக் கழகக் காலத்தவர் (கி. பி. 2-ஆம் நூற்றாண்டு). இன்னொருவர் 12-ஆம் நூற்றாண்டினர். வான் கோழி இந்நாட்டிற்குப் பதினாறும் நூற்றாண்டிற் கொண்டுவரப் பட்டதாயின், ஆத்தி சூடி, கொன்றை வேந்தன், நல்வழி, மூதுரை ஆகிய அற நூல்களை இயற்றியவரை 16–ஆம் அல்லது 17–ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த 3-ஆம் ஒளவையாராகக் கொள் ளவும் இடமுண்டு.

● ''தொல்காப்பியம்'' தனித்தமிழில் எழுதப்பட்டுள்ளதா?

○ தொல்காப்பியம் ஓர் ஆரியரால் எழுதப்பட்ட சார்பிற் சார்பு நூல். அதற்குமுன் தனித்தமிழ் முதனூலும் வழிநூலும் நூற்றுக் கணக்கான சார்பு நூல்களும் அழிக்கப்பட்டுப் போயின. தொல் காப்பியத்திலுள்ள வட சொற்களும் இருபதிற்கு மேற்பட்டவை யல்ல. அந்நூலின் விரிவை நோக்கும்போது அவை பொருட் படுத்தத் தக்கனவாகா. இருப்பாணியுள்ள மர நாற்காலியும் மர நாற்காலியென்றே சொல்லப்படுவதுபோல், ஒரு சில வட சொற்களுள்ள தொல்காப்பியமும் தனித் தமிழ் நூலென்றே கொள்ளப்படும்.

மேலும், தொல்காப்பிய வட சொற்கள் தமிழுக்கின்றியமை யாதனவுமல்ல. அவை வேண்டாது புகுத்தப்பட்டனவாதலின், அவற்றை விலக்கவுங் கூடும்.

உலகில், பிற மொழிச் சொல்லின்றி முழுத் தூய்மையாய் எழுதக்கூடிய மொழி தமிழ் ஒன்றே. வட மொழிச் சொற்களுள் ஐந்திலிரு பகுதி தமிழாயிருப்பதை நோக்கும்போது, தொல்காப் பிய வட சொற்றொகையால் அதன் தனித்தமிழ் நடை இழுக்குறு வதன்றென்க.

கம்பராமாயணம் புகழ் பெற்றதுபோல் பாமர மக்களிடம் கழக இலக்கியங்கள் புகழ் பெறாததின் ஏதுவென்ன?

கழகவிலக்கியம் கம்பராமாயணம்போற் புகழ் பெறாமைக்குக் கரணியங்கள் (காரணங்கள்),

1) ஆரியம் உயர்த்தப்பெற்றதும் தமிழ் தாழ்த்தப்பட்டதும்.
2) இராமாயணப் பாட்டுடைத் தலைவன் இறைவன் தோற்றரவு (அவதாரம்) என்னும் நம்பிக்கை.
3) கம்பன் கல்வித் திறம்.
4) இராமாயணக் கதையின் விரிவும் பொருட் பன்மையும்.
5) இற்றைத் தமிழ்ப் பொதுமக்களின் தாழ்ந்தஅறிவு நிலை.

● தாய் மொழிக்குத் தீங்கு இழைப்பவர்களை என்ன பெயரிட்டு அழைக்கலாம்?

○ தாய் மொழிக் கொலைஞர் என்றழைக்க.

● ''மறை''யின் பொருள் விளக்கமென்ன?

○ கல்லா மக்கட்கு மறைவாயிருக்கும் பொருள்களை விளக்குவது மறை.

● ''இராவண காவியம்'' பற்றித் தங்கள் கருத்து யாது? அதனைத் தடை செய்தது சரியா?

– ச. கி. வேணி இளம்பரிதி.

○ இராமாயணக் கதையால் தென்னாட்டார்க்கு அல்லது தமிழர்க்கு இழிவு ஏற்பட்டுள்ளதென்று கருதி, அதனை நீக்குவது இராவண காவியம். இராமாயணம் ஒரு வகுப்பாரால் மறை நூலொத்த மத நூலாகக் கொள்ளப் பெறுவதால், அவர் மனத்தைப் புண்படுத்தக் கூடாதென்று அதனைத் தடை செய்துள்ளனர் அரசியலார்.

சீதை இராமனுக்குத் தங்கையென்றும், இராமன் தன் தங்கையை மணந்தானென்றும், இராமன் இராவணன் மனைவியைக் கவர்ந்தானென்றும், பல்வேறாக நாற்பது இராமாயணக் கதைகளிருப்பதாகச் சொல்லப்படுவதாலும், இராமாயணம் கட்டுக் கதையென்று ஆராய்ச்சியாளரால் கருதப் பெறுவதாலும், எந்த இராமாயணக் கதை வேறுபாட்டையும் தடை செய்யக் கூடாதென்பது ஒரு சாரார் கருத்து.

● மொழி வளர்ச்சிக்குரிய தங்களின் வருங்காலத் திட்டமென்ன?

– அறிவன், பறம்பை.

○ தமிழிலுள்ள அயற் சொற்களெல்லாம் களைந் தெறியப்படல் வேண்டும். வழக்கு வீழ்த்தப்பட்ட பழந் தமிழ்ச் சொற்கள் புதுக்கப்பெறவும், இக்காலத்திற்கேற்ற புதுச் சொற்கள் தனித்

தமிழிற் புனையப் பெறவும் வேண்டும்.

ஆட் பெயர், பொருட் பெயர், இடப் பெயர் எல்லாம் தமிழ்ச் சொற்களாயிருத்தல் வேண்டும்.

அயற் சொற்போன்றே அயலெழுத்தும் வேண்டா.

மேலை அறிவியல் நூல்களெல்லாம் தமிழில் மொழி பெயர்க்கப் பெறல் வேண்டும்.

தமிழ் நாட்டு ஆட்சியும் தமிழர் சடங்கும் திருமணமும் கோயில் வழிபாடும் தமிழில் நடைபெறல் வேண்டும்.

உயர் மேற் கல்வி கற்கவும் வெளிநாடு செல்லவும் விரும்புவார்க்கு ஆங்கிலத்திலும், உள்நாட்டிற் பிழைப்பிற்காக மட்டும் கல்வி கற்பார்க்குத் தமிழிலும், ஆக இரு மொழியிலும், முதலிலிருந்து இறுதிவரை கல்வி கற்பிக்கப் பெறல் வேண்டும்.

இந்தியும் சமற்கிருதம் என்னும் வடமொழியும் தமிழர்க்கு வேண்டா. தமிழ் கெட்டதே சமற்கிருதத்தால் தான். மேலையாரியத்தைச் சேர்ந்த ஆங்கிலம் கீழையாரியமாகிய சமற்கிருதத்ினும் தமிழுக்கு மிக நெருக்கமாகும். இவ்வுண்மையை ஆராய்ச்சியில்லார் அறியார்.

இந்திய ஆட்சி ஆங்கிலத்திலேயே நடைபெறல் வேண்டும். வடவர் இதற்கிசையாவிடின், தமிழ்நாடு மொழியியல் தன்னாட்சி (Linguistic Autonomy) பெறல் வேண்டும். அதன்படி, தமிழ் நாட்டொடு நடுவண் ஆட்சிக்கும் (Central Govt.) பிற சீமைகட்கும் (மாகாணங்கட்கும்) ஆங்கிலத்திலேயே தொடர்பிருக்க முடியும்.

இந்தியைப் பொது மொழியாகத் தமிழறிஞர் ஒப்புக்கொள்ளவில்லையென்றும், அது பொது மொழியாகும் தகுதியுடையதன்றென்றும், அதுவும் ஆங்கிலம்போல் தமிழர்க்கு அயன்மொழியும் ஆரியமொழியுமாகுமென்றும், ஆங்கிலம் அறிவியன் மொழியும் இந்திய மொழியும் உலகப் பொது மொழியுமாயுள்ளதென்றும், மாந்தன் வாழ்நாள் குறுகியுள்ள இக்காலத்திற்கு இரு மொழிக் கொள்கையே ஏற்குமென்றும், அறிந்து கொள்க. *

வேறென்ன சொல்வது?

● இந்திய சேலைகளுக்கு அமெரிக்காவில் பெரும் வரவேற்பு. —செய்தி

○ ஆகையால் இந்தியப் பெண்கள் தாங்கள் அணியும் சேலைகளை அங்கு அனுப்பிவிட்டு அதற்கு ஈடாக நீண்ட சட்டைகளை இறக்குமதி செய்வார்கள்!

● நோயைப் பற்றிய ஓரளவு அறிவு எல்லா மருத்துவர்களுக்கும் தேவை. —மருத்துவ அமைச்சர் சுசீலா நய்யார்

○ மருத்துவக் கல்லூரிகளில் அவர்களுக்குப் பயிற்றப்படுவது தான் என்ன?

● சட்டம், வழக்கு மன்றத் தீர்ப்பு கூட இந்தியில் இருக்க வேண்டும்.
—ஆட்சிமொழிச் சட்டம்

○ அதன்பின் வம்பு வழக்கே இருக்காது...!

● கையூட்டைப் பற்றிக் கண்டித்த பாராளுமன்றஉறுப்பினரே அமைச்சர்க்குப் பரிந்துரையாக எழுதிய மடலை அமைச்சரே வெளிப்படுத்தினர். —செய்தி

○ ஆயிரத்தில் ஒன்று!

● மணவிலக்குக் கோரிய வழக்கு!மனைவிக்காக கணவனே வழக்காடுவார்! —செய்தி

○ வென்றாலும் தோற்றாலும் இருவருமே பலன் பெறுவர்!

● திரைப் படங்கள் ஒழுக்கத்தை வளர்க்க வேண்டும்.
— குடியரசுத் தலைவர் பர். இராதாகிருட்டிணன்

○ ஆட்சியைத் தம் கைகளில் வைத்துக் கொண்டு, வேண்டுகோள் விடுப்பது எதற்கோ?

● இந்தி வந்தால் சமற்கிருதம் அழியும். —பர். சி.பி.இராமசாமி

○ அவரவர்க்கு அவரவர் கவலை!

● உதகையில் பொழுதுபோக்காளர் விடுதியைப் பக்தவத்சலம் திறந்துவைத்தார்—செய்தி

○ அதைத் திறக்கப் பொருத்தமானவர்.

● பகை மூட்டும் கிளர்ச்சிகளில் தி. மு. க. ஈடுபடாது.
—அண்ணாதுரை

○ வலியேற்படாமல் அடியா?

● சரியான ஆங்கில—தமிழ் அகர முதலி (Dictionary) யை பக்தவத்சலம் வெளியிட்டார்.
—செய்தி

○ அதில் Collector—கலக்டர் என்றும், Police—போலீசு என்றும் மொழி பெயர்க்கப்பட்டு இருக்குமோ?

● இந்தி ஆட்சி மொழிபற்றி அமைச்சர் பக்தவத்சலம் காட்டி வரும் போக்கு நமக்கு மகிழ்ச்சி யளிக்கிறது.

—இலால் பகதூர் சாத்திரி

● இந்தியைத் திணித்தால் வடநாடு தென்னாடு பிரிவுணர்ச்சி வளரும். —பிரிட்டிசு "கார்டியன்" செய்தித்தாள்

● காமராசர் ஆட்சிக்கு வலி ஊட்டுவது இந்தி எதிர்ப்பை விடத் தலையானது.

—பெரியார் ஈ. வே. இரா.

● பெயர் பெற்ற திருட்டுக் கூட்டத்திற்கும் சிறைக் காப்பாளர்கட்கும் தொடர்பு? வேலூர் வட்டத்தில் திருக்கிடும்செய்திகள்

—செய்தி

● இந்தியை எப்போது ஒழிப்பது என எனக்குத் தெரியும்.

—பெரியார் ஈ. வே. இரா.

● பக்தவத்சலத்திடம் பொற்கொல்லர் முறையீடு. —செய்தி

● கம்பனை வேண்டாம் என்றால் தமிழே வேண்டாமென்று தான் பொருள்.

—அமைச்சர் பக்தவத்சலம்

● குழுமங் (Company)களின் ஊழல்களைத் தவிர்க்கப் புதுச்சட்டம் —அமைச்சர் கே.சி.இரெட்டி

● மாவட்டத்திற்கு ஒரு குடும்பக் கட்டுப்பாட்டு ஆணையர்.

—அமைச்சர் சுசீலாநய்யார்

● இந்துக்கள் குறைந்து பௌத்தர்கள் பெருகி வருகின்றனர். —செய்தி

● இந்தியாவில் படை மறவர் ஆட்சி ஏற்படலாம்.

– பாராளுமன்றத்தில் கருத்து

● எல்லாரும் வாழப் பிறந்தவர்கள் என்ற எண்ணம் வளர வேண்டும். – காமராசர்

○ அதாவது அவர்க்குத் தருகின்ற ஊதியத்திற்குத் தக்கபடி வேலை செய்கின்றார்;.

○ இங்கிருப்பவர்களுக்குப் புரியாத 'அரசியல்' அறிவு!

○ வீடுபற்றி எரிகையில் சுருட்டுக்கு நெருப்புக் கேட்கின்றார்.

○ இதில் திடுக்கிட என்ன இருக்கின்றது? அரசியலையே அவர்கள் தாமே கைப்பற்றி யுள்ளனர்.

○ அதாவது தும்பை விட்டு விட்டு வாலைப் பிடிக்கவேண்டும்.

○ அவர் உடனே தில்லிக் கல்லவா வழி காட்டுவார்.

○ தமிழில் கம்பனைத் தவிர வேறொன்றும் அறியேன் பராபரமே!

○ சட்டங்கள் செய்வோம் — வெறுந்
திட்டங்கள் செய்வோம்.

○ ஒவ்வொரு வீட்டிற்கு ஒவ்வொருவர் வந்தாலும் வியப்பதற்கில்லை.

○ மூட நம்பிக்கை குறைந்து பகுத்தறிவு பெருகி வருகின்றது.

○ நிலை இப்படியே போனால் இதைத்தான் எதிர்பார்க்கலாம்.

○ வாழ்க்கை என்பது எது? உரிமையை இழப்பதா?

*

கட்சிச் சார்பற்ற தன்மானக் கொள்கை ஏடு!
அறிவியல்,வரலாறு,இலக்கியப்பகுதிகள் முதலியன நிறைந்து தமிழ் மக்கள்தம் முன்னேற்றத்திற்கு நல்வழி காட்டுகின்றது.

குத்தூசி

(திங்கள் இதழ்)

ஆசிரியர்: சா. குருசாமி

தனியிதழ் 50 காசு. ஆண்டுக் கட்டணம் 5 உருபா.

விளக்கங்கட்கு:

குத்தூசி
84, செஞய் நகர், சென்னை–30

* பகுத்தறிவுப் பாசறைக்கு புதிய படைக்கலன்!
● மக்களிடையில் படிந்து விட்ட மூட நம்பிக்கைகளையும் குருட்டு எண்ணங்களையும் வேரோடு அழிக்கப் பணி புரியும் புரட்சி ஏடு!
○ தமிழர்களுக்கு விழிப்புணர்ச்சி யூட்டவந்த ஈழத்தின் ஒரே இதழ்!

பகுத்தறிவு

அரசியல் கலப்பற்ற திங்களிதழ்.

தனியிதழ் 15 சதம். ஆண்டுக் கட்டணம் 2 உருபா.

விளக்கங்கட்கு:

பகுத்தறிவு
89, பாமன் கட லேன், கொழும்பு–6

"தென்மொழி" பற்றி

'தென்மொழி' பல சான்றோர்களின் சீரிய கட்டுரைகளைக் கொண்டு திகழ்கின்றது. ஆழ்ந்த துயிலிற் கிடக்கும் தமிழ் மக்களைத் தட்டி எழுப்பி உணர்ச்சியூட்டுந் தகைமையில் தனக்குத்தானே நிகரானது. எல்லா வகையானும் சாலச் சிறந்த இதனை வரவேற்கின்றோம். செந்தமிழ் அன்பர்கள் இதனை வாங்கியும் வாங்குவித்தும் வண்பயன் எய்துவார்களாக.

செந்தமிழ்ச் செல்வி
சிலம்பு 34 பரல் 2

தமிழ் வளர்ச்சிக்குப் பாடுபடுதற் பொருட்டே ஒரு தாளிகை தோன்றுகிறதெனின், அத்தாளிகைக் கின்றியமையாத பெருந் தகுதி மொழித் துறைத் தகுதியாகும். இத்தகுதி முற்றிலும் வாய்ந்த தனித் தமிழ்த் தாளிகை தென்மொழி......தமிழைப் பேணி வளர்ப்பதற்காக எழுந்துள்ள இத்தாளிகையைத் தமிழர் என்று சொல்லிக் கொள்கின்ற ஒவ்வொருவரும் (உறுப்பினராகச் சேர்ந்து) வாங்கிப் போற்றுதல் வேண்டும். இது தமிழரின் முதற் கடமையாகும்......

தமிழ் முரசு
சிங்கப்பூர் 13—9—59.

மலையாளம், தெலுங்கு, கன்னடம் போன்று, தமிழையும் உருமாற்றம் செய்து மகிழச் சில தீய சக்திகள் தமிழகத்தில் உலவி வருகின்றன. கேடுதரும் அவற்றை வெட்டிச் சாய்த்துப் புதைக்கும் நோக்குடன் தென்மொழி வீறு கொண்டு முழக்கமிடத் தொடங்கியிருக்கின்றது...தென்மொழியைப் பேணிக்காப்பது தமிழ் மக்களின் கடமை என்பதைத் தமிழகம் உணரவேண்டும்.

நவ இந்தியா
14—10—59.

தென்மொழியே! தேன் கருத்தே! தமிழ்ச் சர்க்கரைக் கட்டியே!...அரைகுறைப் படிப்பாளிகள், கலப்படமான தமிழ் நடையில்தான் எழுதி வருகிறார்கள் என்ற பெரும் புலவர் மனக் குறையைப் போக்க வந்த தனித்தமிழ்ப் பெட்டகம் நீ! உன் கருத்து முழுதும் தேன். ஆம்! தனித் தமிழைச் சுவைக்க விரும்புவார்க்குக் கலப்பில்லாத தனி இனிப்பு. கரடு முரடில்லாத தனித்தமிழ் கூட எழுத முடியும் என்பதற்குத் தென்மொழி ஏடு தலைசிறந்த எடுத்துக் காட்டு......

விடுதலை
21—4—60.